# பன்னிரு புலவர் சரித்திரம்

# TWELVE STANDARD TAMIL POETS

திவான் பஹதூர்

வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்

[சென்னை சர்வகலாசாலை அங்கத்தினர்; திராவிடகலாசபை அக்கிராசனாதிபதி; லண்டன் வித்யாசங்கம் முதலியவற்றின் அங்கத்தினர்; பலநூல்களின் ஆசிரியர்; 'ஜனவினோதினி' 'மஹாராணி' பத்திராசிரியர்]

எழுதியது.

ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிட்டி ப்ரேஸ்

சென்னை, பம்பாய்.

1919

[ரிஜிஸ்தர் செய்தது.]

MADRAS:
PRINTED BY THOMPSON & CO., AT THE "MINERVA" PRESS,
33, POPHAM'S BROADWAY.

TO THE MEMORY

OF

# EYRE BURTON POWELL, ESQ., C. S. I.

**This Compilation**

IS

*DEDICATED WITH VENERATION AND GRATITUDE.*

---

## NOTE.

In presenting this collection of biographical sketches in Tamil Prose of a select number of old-time poets, it will be useful to state that this Volume is intended to impress on the student some ideas of the lives and writings of different typical poets of the Tamil land and the matter and manner of their compositions. Every effort has been made to render the sketches readable and accurate and instructive to candidates preparing for the University and Government Examinations, for which they are designed to be prescribed as a text book from time to time in parts or as a whole.

Valuable suggestions have been secured from Mahamahopadhyaya V. Swaminatha Iyer, Professor T. Chelvakesavaraya Mudaliar, M A. and Pandit T. Venkata Ramiengar in the choice of illustrative passages added to each poet's biography.

# பொருளடக்கம்

## பகுதி 1.


1. வில்லிபுத்தூரார் சரித்திரம்
2. வரதுங்கபாண்டியன் ,,
3. பிள்ளைப்பெருமாளையங்கார் ,,
4. கம்பர் ,,
5. புகழேந்திப் புலவர் ,,
6. ஒட்டக்கூத்தர் ,,


## பகுதி 2.


7. திருஞானசம்பந்தர் ,,
8. சடகோபர் ,,
9. மாணிக்கவாசகர் ,,
10. நக்கீரர் ,,
11. ஔவையார் ,,
12. திருவள்ளுவர். ,,

# வில்லிபுத்தூரர்

வில்லிபுத்தூரர் இனிய தமிழ்க்கவி பாடும் புலவரெனப் பேரிசை கொண்டவர். இவரை வில்லிபுத்தூர் ஆழ்வார் என்றும் கூறுவதுண்டு. ஆழ்வார் என்பதன் பொருள் 'பக்தியில் அழுந்தினவர்' என்பதாம். இது தமிழில் நாலாயிரப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்களை முதன்மையாக உணர்த்துவதாயினும் பிற்காலத்தில் திருமாலிடத்தில் பக்தி மிகுந்த பிறரையும் உபசாரவழக்காய் உணர்த்துவதாயிற்று. இவ்வழக்கப்படியே பரதாழ்வான், சத்துருக்னாழ்வான், பிரகலாதாழ்வான், கஜேந்திராழ்வான், சுதரிசனாழ்வான் என வழங்கிவருதல் காண்க.

வில்லிபுத்தூரர் பிறந்தவூர் சனியூர். இது பெண்ணை நதி பாயும் திருமுனைப்பாடி நாட்டிலுள்ளது. அக்காலத்தில் சேரர்பூபதி வரபதிஆட்கொண்டான் என்பவன் ஒருவனிருந்தான். இவனுக்குத் தலைநகராய் இருந்தது பக்க பாகை என்பது. இவன் பிறந்தவூரும் சனியூரேயாம். இவன் தன் காலத்தில் தமிழை மிகவளம்படுத்தித் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவன். தமிழ்மொழியை மேம்படுத்தித் தனது புகழைத் தமிழ் நாடெங்கும் பரவச்செய்தான். முன்பு சேரன் எல்லை கொங்குநாட்டளவிலேதான் இருந்தது. பிறகு வட கொங்கு என்னும் நாட்டிலும் பரவியது. வடகொங்கு திருமுனைப்பாடி நாட்டைச் சார்ந்தது. இதிற்றான் திருக்கோயிலூர், திருவெண்ணெய் நல்லூர் முதலிய பிரபல ஸ்தலங்கள் விளங்குகின்றன.

இதற்கு நடுநாடென்று மற்றொரு பெயருமுண்டு. இதனைச் சேதிநாடெனவும் வழங்கியுள்ளார்கள்.

"பொன்மாரி பெய்யுமூர்; பூம்பருத்தி யாடையாம்;
அந்நாள் வயலரிசி யாகுமூர்;—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்குந் திருக்கோயி லூர்."

என்னும் இவ்வெண்பா ஔவையார் திருக்கோயிலூரைச் சிறப்பித்துப் பாடியது. முன்னாளில் ஆட்கொண்டானைக் கோங்கர்கோன் என்று வழங்கிவந்தமையால் சனியூரைக் கொங்குநாட்டு எல்லையுட் சேர்ந்த கோயன்புத்தூர் போக்கில் உள்ளதென்று பலர் மயங்க இடமுண்டாயது. இது கிடக்க.

வில்லிபுத்தூரர் சமயாசாரத்தால் வைணவர். மாதவன் சரணகமலங்களில் பக்திமிகுந்தவர். இவர் பக்திக்கு விஷயமான பரம்பொருள் திருமாலே என்பது பாரதம் முதற்போர்ச் சருக்கத்தில் இவர் பாடியுள்ள வணக்கக் கவியாலே இனிது விளங்குகின்றது. அக்கவி வருமாறு:

"மேவரு ஞான நந்த வெள்ளமாய், விதித்தோ னாதி
மூவரு மாகி, அந்த மூவர்க்கு முதல்வ னாகி,
யாவரும் யாவு மாகி, இறைஞ்சுவா ரிறைஞ்சப் பற்பல்
தேவரு மாகி நின்ற செங்கண்மா லெங்கள் கோவே."

இதனால் இவர்க்கு வழிபடுகடவுள் திருமால் என்பது மலைமேல் ஒளிரும் தீபம்போல் விளங்குகின்றது. ஆயினும், இவர் வீரவைஷ்ணவரல்லர்.

பிராமண ஜாதியிலே வைணவ குலத்திலே வீரராகவாசாரியருக்குத் திருக்குமாரராய்த் தோன்றிய இவர் 'விளையும்பயிர் முளையிலே தெரியும்' என்னும் பழமொழிப்படி பாலியத்திலேயே நல்லாசிரியரை யடுத்துக் கல்விபயின்று

முத்தமிழும் வல்லவராய்த் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையெனும்படி மகா பண்டிதரானார். நான்குவகைக் கவி களையும் மிக எளிதில் அமிழ்தினு மினியவாகப் பாட வல்ல வரானார். தமிழ்நாட்டு மூவேந்தர்களாலும் குடை, சாமரை குதிரை, யானை, சிவிகை முதலிய பரிசுகள் அளிக்கப் பெற் றுப் புலவர் சிகாமணியாய்ச் சிறப்புற்று விளங்கினார். சோழ நாடு, பாண்டிநாடு, மலைநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு, மகிஷநாடு எனப் பல வேறு பிரிவுகளையுடைய தமிழ்நா டெங்கும் சஞ்சரித்துத் தமது புகழைத் தமிழுலகெங்க ணும் பரவச்செய்தார்.

அகத்தியப்பட்டர் என்பவர் வடமொழியில் பாலபாரத மென ஒரு சுருக்கப் பாரதநூல் செய்துள்ளார். அதன் போக்கை யொட்டியே வில்லிபுத்தூரர் தமது பாரதக் கதைகளைச் சுருக்கிக் கூறியுள்ளாரென்பது சிலர் கொள் கை. ஆனால் வில்லிபுத்தூரர் பாடிய கவிகளில் அமைந் துள்ள சந்தவின்பத்தையும் சொல் நடையையும் நோக்குங் கால் அவ்வாறு சொல்வதற்கில்லை. இப் பாரதமொழிய வேறுநூல் இவர் செய்ததாய்ப் புலப்படவில்லை. அருண கிரிநாதர் பாடிய கந்தரந்தாதிக்கு அவர் கருத்துக் கிணங்கப் பொருள் கூறியவர் இவரே. இவர் அப்போதைக்கப்போது பாடிய தனிப்பாடல்களைத் தொகுத்து வைத்தவர் ஒருவரு மில்லை. காலகதியால் மறைந்தனபோலும்.

இவர் ஏராளமாகத் தமக்குச் செல்வமும் பரிசும் கொ டுத்து ஆதரித்து வந்த வரபதி ஆட்கொண்டானென்னும் அரசனைத் தாம் பாடிய பாரதத்துள் இடையிடையே புகழ்ந் துள்ளார். இதனை நரஸ்துதியெனக் கொள்ளாது நன்றி கூறல் எனக் கொள்ளலே சிறப்புடைத்தாம்.

வில்லிபுத்தூராருக்குப் பெயர் வந்த வழி யாதெனிலோ கூறுவோம். வைணவப் பிராமணர்கள், விஷ்ணுவின் பல நாமங்களிலொன்றைத் தமக்குப் பெயராக வழங்கிவரும் ஒரு புராதன வழக்கமுண்டு. சில தலங்களில் கோவில் கொண்ட மூர்த்திகளின் பெயரை நம்மவர் தமது ஆண் பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் நாமங்களாக வழங்கிவரும் விசேஷ வழக்கமுமுண்டு. அந்தந்தத் தல மூர்த்திகளின் அருளால் மகப்பேறு பெற்றதாகக் கருதி வரும் காரணத்தால் இவ் விசேஷ வழக்கம் நடைபெறு கின்றது. உதாரணமாக ஒன்றைக் காட்டுவோம். காரியென் னுஞ் சிற்றரசன் திருக்குறுங்குடியில் வரங்கிடந்து நம்மாழ் வாரைப் பெற்றான். அத்தலத்தின் மூர்த்திக்கு நம்பி என் னும் பெயர் உண்டு. அந் நம்பியே தமக்குப் புத்திரராகத் திருக்குருகூரில் வந்து பிறந்ததாகக் கருதி, காரி தனது குழ விக்குத் திருக்குருகூர் நம்பி என்று பெயரிட்டனன். இவ் வாறே வந்த பெயர்கள் பலவுண்டு. ஆழ்வார்கள் பெயரையும் வைணவர்கள் தம் பெயராக வழங்குதலுண்டு. பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய பெரியாழ்வார்க்கு, பட்டர் பிரான், வில்லிபுத்தூராழ்வார் என்னும் பல பெயர்களுண்டு. இந்த ஆழ்வாரின் வரப்பிரசாதத்தால், பாரதம் பாடிய இந் தத் தண்டமிழ்ப் புலவர், வீரராகவாசாரியர் குமாரராய்த் தோன்றிய காரணத்தால் இவருக்கு வில்லிபுத்தூரரென் பது பெயராக இடப்பட்டிருக்கலாம். அல்லது பெற்றோர் பலநாள் வில்லிபுத்தூர் சென்று தலவாசஞ் செய்ததினு லோ, அல்லது தம் பந்துக்களுடன் அங்கு வசித்ததினுலோ வில்லிபுத்தூரர் என இவர் பெயர் பெற்றிருக்கினும் இருக் கலாம். இது நிற்க.

செந்தமிழ்க் கலாவிநோதனுக விளங்கிய ஆட்கொண்

டான் பாரதத்தைத் தமிழில் இனிய பாடல்களாகப் பாடு விக்க வேண்டுமென்று நினைத்துத் தன் பக்கத்திலிருந்த புலவர்களைப் பார்த்து, தன் கருத்தைக்கூறி, அதை நிறைவேற்றத்தக்க தண்டமிழ்ப்புலவர் யார் என்று வினவினான். 'இனிய கவிபாடும் புலவர்களுள் தலைமைபெற்றவர் சனியூர் வில்லிபுத்தூரரே' என்று அவர்களெல்லோரும் ஒரே தொனியாய்க் கூறினர். அவர் திருமாலை வழிபடும் பக்தர் சிகாமணியென்றும், கல்வியும் ஒழுக்கமும் மனத்தூய்மையும் நடுவு நிலைமையும் அவரிடத்து நிலைத்துளவென்றும் அப்புலவோ ரனைவரும் கூறினர். அவர்கள் கூறியவாறே வில்லிபுத்தூராழ்வார் கல்வித்திறம் முதலியன நிறையப் பெற்றவரே என்பது இவர் குமாரர் வரந்தருவார் தமது பாயிரத்துப் பாடிய இரண்டு பாடல்களால் இனிது விளங்குகின்றது. அப் பாடல்களாவன:—

"ஐந்து பாவுடை நால்வகைக் கவிக்கதி பதியாய்
வந்து வட்டமா மணியினன் மணிமுடி புனைந்து
பைந்து ழாய்முடிப் பரமனைப் பலகவித் துறையுஞ்
சிந்தை யான்மொழிந் தன்பர்தம் திருவுளம் பெற்றோன்."

"தென்னர் சேரளர் செம்பிய ரெனப்பெயர் சிறந்த
மன்னர் மூவரும் வழங்கிய வரிசையா லுயர்ந்தோன் ;
முன்ன ரெண்ணிய முத்தமிழ்ப் பாவல ரெவரும்
பின்னர் வந்தொரு வடிவுகொண் டனரெனப் பிறந்தோன்."

வில்லிபுத்தூராருக்கு ஒரு சகோதரர் இருந்ததாயும் தெரிய வருகிறது. அச்சகோதரரும் இவரும் மதுரையிற் பாண்டிய அரசனிடம் சென்று அங்கிருந்த தமிழ்க் கலைவாணருடன் சின்னாள் வசித்து வந்தார்கள். அத்தருணத்தில் வில்லிபுத்தூரரைக் கொண்டு பாரதம் பாடுவிக்கவேண்டும்

என்று விரும்பியிருந்த ஆட்கொண்டான் தன் விருப்பம் நிறைவேறக் குறுக்குபாயம் ஒன்று செய்தான். அதாவது:

சேரன் வில்லிபுத்தூரார் குலத்தவளான ஒரு கிழவியை வரவழைத்து, 'நீ வில்லிபுத்தூரார் மனைக்கேகி அவர் மனைவி அவர் தம்பி மனைவிகளுக்குள் கலகமுண்டாக்கி அவர்கள் புருஷர்கள் மதுரையிலிருந்து திரும்பிவந்து, குடும்பக் கலகத்தால் பாக வழக்கொன்று அரசனைக் கேற்றும்படி பக்குவப் படுத்தி வரவேண்டும்' என்று கூறிப் பலவகை யுபசரணையுஞ்செய்து கைநிறையப் பணமுங் கொடுத்து அனுப்பினான். வழக்குவரின் அக்காரணத்தைக் கொண்டு வில்லிபுத்தூராரால் பாரதம் பாடுவிக்கலாம் என்பது ஆட்கொண்டான் எண்ணம். அவன் கருத்துக்கிசைந்து அக்கிழவியும் சனியூரில் வில்லிபுத்தூரார் மனைக்கேகி அவர் பெண்சாதி அவள் ஓரகத்தி இவர்களிடம் முதலில் அன்பு பாராட்டிப் பிறகு அவ்விருவர் மனதையும் கல்லைக் கரைப்பதுபோற் கரைத்து அவர்களுக்குள் தீராத விரோதம் விளைத்துவிட்டாள். அது முதல் அவர்கள் தத்தம் கணவருடன் இனித் தனித்தனியாய்ப் பாகம் பிரித்துக் கொண்டு வசிக்கவேண்டியதே யன்றிச் சேர்ந்து வசிப்பதில்லை யென்று நிச்சயம் செய்து கொண்டார்கள்.

சிலநாள் கழிந்தபிறகு இவ்விரு மடந்தையரின் கணவன்மார் மதுரையினின்று திரும்பிவந்தார்கள். வீட்டில் பூனையும் எலியும் போல் இரண்டுபெண்களும் இருப்பதைச் சகோதரர்கள் இருவரும் நேரிற்கண்டு, இனிப் பாகம் பிரிந்தாலன்றி வீட்டின் நிலை சீராகாதென்று நிச்சயித்துக் கொண்டு அரசனிடம் பாகவழக்குத் தொடர்ந்தார்கள். அரசன் வில்லிபுத்தூராரையும் அவர் சகோதரரையும் நோக்கி

"நீங்களிருவரும் தமிழிற் கவி பாடுவதிற் சிறந்தவர்களாதலால் மகா பாரதத்தைத் தமிழிற் பாடினால் உங்கள் குடும்பத்தில் பாகம் பிரிக்க வந்துள்ள வழக்கைத் தீர்த்து வைப்பேன்" என்றான்.

வில்லிபுத்தூரார் அரசன் வேண்டுகோள் என்பதையும், பாரதம் அரியபெரிய நூல் என்பதையும் அதிகமாசப் பாராட்டாது, பாரதத்தில் கண்ணன் சரிதை கலந்திருத்தலாலும், பாரதம்பாடும் காரணத்தால் கண்ணபிரான் திருச்சரிதத்தைக் கூறலாம் என்ற ஆசையாலும் அதற்கு உடன்பட்டார். அது பின் வருங் கவியால் விளங்கும்:

"முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்:
மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கும்
என்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்."

இவ்வாறு வில்லிபுத்தூரார் பாரதம் பாட இசைந்து ஆட்கொண்டானிடம் சிலகாலம் தங்கியிருந்து அவன் வேண்டுகோளின்படியே பாலு மமுதும் முப்பழச்சாறும் கைக்கு மென்னுமாறு செம்பாக மமைந்து, சந்த இன்பம் நிறைந்து, பொருணயம் சிறந்து விளங்கும் அரிய செந்தமிழ்ப் பாடல்களால் பாரதத்தைப் பாடி முடித்தனர்.

"கலியுக வியாதன் சொல்லக் கணபதி யெழுது பாடல்
பொலிவுறு தமிழி னாறா யிரமென விருத்தம் போற்றிச்
சலிவற வில்லி புத்தூ ரிறைவனும் சார்வ பூமன்
ஒலிகெழு மறையோர் சோமா னுயர்ந்தவ ருவப்பச்சொன்னான்."

என்னும் பழம்பாடல் ஒன்றினால், வில்லிபுத்தூரார் ஆறாயிரம் விருத்தங்களால் பாரதத்தைப் பாடினார் என்று தெரிகிறது. ஆனால், இதுகாறும் அச்சிற் பதிப்பித்துள்ள வில்லிபுத்தூரார் பாரதங்களில் 4351-செய்யுள்கள் மட்டும் காணப்

படுகின்றன. எஞ்சிய 1,649—செய்யுள்களும் அச்சியந்திர வாயிலாக இன்னும் வெளிப்படவில்லை. ஏட்டுப் பிரதி எங்குளதோ அதுவும் புலப்படவில்லை. சிலர் வில்லிபுத்தூராரின் குமாரர் வரந்தருவார்தான் பாரதத்தின் பிற்பகுதியை 1,649-தமிழ்க் கவிகளாகப் பாடியுள்ளாரென்றும் வரந்தருவார் பாரதமென்று அது வழங்குகிறதென்றும், ஆனால் அச்சிற் பதிக்கப்படவில்லையென்றுங் கூறுகின்றனர்.

ஆதிபருவத்தில் சந்தனுமகாராசன் சரித்திரம் முதல் சௌத்திக பருவத்தில் பதினெட்டாம் நாளிரவில் நடந்த பாசறையுத்தம் வரையில் அச்சிடப்பட்டு வழங்கிவருவது தான் வில்லிபுத்தூரார் பாரதமெனப் படுகின்றது. அரசன் வில்லிபுத்தூராரின் சகோதரரையும் பாடும்படி கேட்டுக் கொண்டதால் வில்லிபுத்தூரார், பாரதத்தின் பின்பாதியைத் தம் சகோதரர் பாடட்டும் என்று தாம் பாடாது விட்டு விட்டனர் போலும்.

பாரதம் பாடியான பிறகு ஒருநாள், அரசன் இவ்விரு சகோதரரையும் நோக்கிப் "பாரதம் தமிழ்ப்பாவாக அமைய வேண்டி உங்கள் குடும்பத்தில் பாகவழக்கொன்று தலையெடுக்கும்படி நானே செய்வித்தேன். மன்னியுங்கள்" என்று வேண்டிக்கொண்டனன். வில்லிபுத்தூரார் தமக்கு இனிப் பாகம் வேண்டியதில்லையென்றும் சந்தத் தமிழ்க்கவி பாடி நாடெங்கும் புலமையரசு செலுத்தத் தமக்கு எண்ணம் உதித்திருக்கிறதென்றும் கூறித் தம்மெதிரில் தமிழ்ச்சந்தக் கவிபாட ஒப்பித் தோல்வி யடைவோர் காதைக் கொய்தெறிய ஒரு வாளாயுதம் உதவும்படி அரசனை வேண்டிக் கொண்டனர். அரசனும் அவ்வாறே தமிழ்ப் புலமைக்கு ஒரு விருதாக, வாளாயுதம் ஒன்று உதவினன். அதைப் பெற்றுக்கொண்டு வில்லிபுத்தூரார் தமிழ்நாடெங்கும் சஞ்

சரித்துத் தமிழ்ப் புலவரெனத் தருக்கி வருவோரோடு தருக்கம் செய்து தோல்வியடைந்த பலர் காதுகளை அரசன் கொடுத்த சிறு வாளாற் கொய்து வெற்றிகொண்டு விளங்கினர். அந்தகக்கவி வீரராகவ முதலியார் பின் வருமாறு இவர் செய்கையையும் புலமையையும் விளக்கியுள்ளார்:

"குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை;
    குறும்பியளவாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை;
    இரண்டொன்றா முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை;
    விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைக ளுண்டு;
    தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே!"

அரங்கநாத கவிராயர் என்பவர் பாரதத்தின் பிற்பகுதியை 46-சருக்கங்களாகச் சொர்க்காரோகணச் சருக்கம் முடிய 2477-செய்யுட்களில் பாடியுள்ளார். அது அச்சிற் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இப் பிற்பகுதியைப் பாடிய அரங்கநாத கவிராயர்,

"பைந்தமிழி னலஞ்சிறந்த புனைப்பாடித் திருநாட்டிற்
    பாகை வேந்தன்
சுந்தரஞ்சேர் பாரதமாம் வடகலையைத் தென்கலையாற்
    சொல்க வென்னச்
சந்தனுவின் சரிதைமுதற் பதினெட்டா நாட்போரின்
    சரிதங் கூறும்
புந்திமகிழ் தரவில்லி புத்தூராழ் வான்முன்பு
    புகன்றிட் டானே."

என்று கூறியிருக்கிறார்.

வில்லிபுத்தூரார் குமாரர் வரந்தருவார் தமது தந்தை பாடிய பாரதத்துக்குத் தாம் தந்த சிறப்புப்பாயிரத்தில்,

ஆட்கொண்டான்,

"பிறந்துய்யக் கொண்டவனிப் பேருலகம்
பெருவாழ்வு கூரு நாளில்
சிறைந்தபுகழ்ச் சனிநகர்வாழ் வில்லிபுத்தூ
ரனைநோக்கி நீயு நானும்
பிறந்ததிசைக் கிசைசிறப்ப பாரதமாம்
பெருங்கதையைப் பெரியோர் தங்கள்
சிறந்தசெவிக் கமுதமெனத் தமிழ்மொழியின்
விருத்தத்தாற் செய்க வென்ருன்."

என்று கூறியிருக்கிருர். இவைகளை நோக்க, சகோதரர் களுக்குள் கலகம் மூட்டி அதன் மூலமாய் வில்லிபுத்தூரரை அரசன் பாரதம்பாடும்படி செய்தான் என்று நாம் முன்னே கூறிய கர்ணபரம்பரையான வரலாறு அவ்வளவாக நம்பத் தக்க தல்ல என்று தெரிகிறது.

வில்லிபுத்தூரர் காலத்திருந்த புலவர்கள் பலர். அவர் களுள் அனந்தன் என்பாளுருவன். இவன் வில்லிபுத்தூரர் எடுத்த சந்தக் குழிப்பின்படி பாடச் சம்மதித்துப் பாடி ஞன். ஆனல் அவன் பாடிய பாடல் வழுவுற்றது. உடனே வில்லிபுத்தூரர் அவன் காதை ஒட்ட அறுக்க ஆரம்பித்த னர். அப்போது தோல்வியுற்றவன் "என் காதுகள் நீங்கு மாயின் நீர் என் பெயர் அனந்தனென்பதை இனிது விளக்கி என்னை ஆதிசேடனுக்குகின்றீர்"* என்று வில்லி புத்தூரரை நோக்கக் கூறினன். இச் சாதுரிய வசனத் தைக் கேட்டு வில்லிபுத்தூரர் அவன் காதுகளை அறுக்காது விடுத்தனர். மற்ருெருவன் சம்பந்தாண்டான் என்பவன். இவன் சமணசமயத்தான்; சத்தி பூசைசெய்பவன்; மந்தி

* அனந்தன் என்பது ஆதிசேடனுக்கு ஒரு பெயர். ஆதிசேடன் பாம்பாதலும், பாம்புக்குக் காதில்லாமையும் உணர்க. கண்ணே செவி யாக உபயோகப்படுவதால் பாம்புக்குக் 'கட்செவி' என்று ஒரு பெய ருமுண்டு.

ரம் பெரிதுங் கற்றவன். ஆனால், தமிழின் சுவை பதியாத நெஞ்சன். இவன் அருணாசலத்தில் வாசம் செய்தபோது, அருணகிரிநாதரோடு வாதம்செய்து தோல்வியுற்று அருணாசலத்தைவிட்டு வெளியே சென்றவன். இவன் இரட்டையர்களை நோக்கி மன்னென்றெடுத்து மலுக்கென்றுமுடிய ஒரு வெண்பாப் பாடுங்களென்றனன். அப்படியே அவர்கள்,

"மன்னுதிரு வண்ணா மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னுந் தலைச்சவரம் பண்ணுவதேன்?-மின்னின்
இளைத்தவிடை மாத ரிவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு."

என்று பாடினார்கள்.

இக் கவியைக் காளமேகன் பாடியதெனச் சிலர் கூறுவர். இது கிடக்க. இந்தச் சம்பந்தாண்டானைத் தோற்கடித்த அருணகிரிநாதரோடு நமது வில்லிபுத்தூரர் வாதம் செய்யச் சென்றார். அக்காலத்தில் அருணாசலத்தில் அரசனாயிருந்தவன் பிரபுடதேவன் என்பவன். இவன் வில்லிபுத்தூரரின் கல்வியின் பெருமையையும் விருதுமுதலிய சிறப்புக்களையும் நன்குணர்ந்தவனாலும் அவர் புலவர்களைக் காதறுப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர்பால் சிறிது அருவருப்புற்றிருந்தது மன்றி, அருணகிரிநாதரைக் கொண்டு அவர் கர்வத்தை அடக்கவேண்டுமென்றும் கருதியிருந்தான். ஆதலால், இவ்விரண்டு புலவர்களும் சந்தித்தபோது, இதுதான் சமயம் என்று, அவன் அருணகிரிநாதரைக் கந்தர்மீது அந்தாதியொன்று பாடச்சொல்லி வில்லிபுத்தூரரை அதற்கு உரை கூறிவரும்படி செய்தான். வில்லிபுத்தூரரும் பெரும்பாகத்திற்கு உரைகூறிக்கொண்டு வந்தனர். அவ்வந்தாதியில் 'திதத்த' எனத் தொடங்கும்

ஐம்பத்து நான்காம் செய்யுள் ஏகாக்ஷரப் பாவாதலாலும், அதில் நடன ஒலிக்குறிப்பை நாட்டியிருந்ததாலும் வில்லிபுத்தூரார் பொருள்கூறச் சற்றுத் தயங்கினர். அப்போது அதன் பொருளை அவருக்கு அருணகிரிநாதர் விளக்கிக் காட்டினர். அப்பால் அருணகிரிநாதர் கூறிய மற்றைய பாடல்களுக் கெல்லாம் வில்லிபுத்தூரார் பொருள்கூறி முடித்தார். அங்குள்ளார், அருணகிரிநாதரை நோக்கி வில்லிபுத்தூரார் தோற்றமையால் அவர் காதைக் கொய்துவிடும்படி தூண்டிவிட்டனர். ஆனல், அருணகிரியார் அவர் செவியைக் கொய்யாமல் 'யான் கொடுத்த செவியாய் விளங்கட்டும்' என்றனர். பிறகு அரசன் இரண்டு புலவர்களையும் சமாதானமாக்கிவிட்டான். அப்பால், வில்லிபுத்தூரார் தமதூர்க்குச்சென்று, அன்றுமுதல் புலவர்கள் காதுகளைக் கொய்வதொழித்துப் புலமை நடாத்திக்கொண்டிருந்தனர்.

இனி, வில்லிபுத்தூரார் தமிழ்நாட்டில் விளங்கிய காலத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம். பாஷை நடையால் தூப்புல் வேதாந்த தேசிகராம் வேங்கடநாதாசாரியர் காலத்திற்கு முற்பட்டது வில்லிபுத்தூரார் காலமென்று தெரிகிறது. அவ் வேங்கட நாதாசாரியர் காலமோ இற்றைக்கு 650 வருஷங்களுக்கு முந்தியதென்று நாட்டியுள்ளார்கள். வைணவர்களின் சமயாசாரியராகிய இராமாநுஜர் மைசூரில் கி. பி. 1113-ம் ஆண்டில் அரசாண்ட விஷ்ணுவர்த்தனன் காலத்தில் மேல் கோட்டையென்னும் திருநாராயணபுரத்தில் வாசஞ்செய்தவர். வில்லிபுத்தூரார் விளங்கிய காலத்தில், இராமாநுஜர் சமயாசாரியராக நாடெங்கும் போற்றப்படவில்லையென்று காணப்படுகிறது. இராமாநுஜர் இற்றைக்கு 900 வருடங்களுக்குமுன் தோன்றியுள்ளாராதலின் வில்லிபுத்தூரார் இற்றைக்கு 700 அல்லது 750 வருடங்களுக்குமுன்

விளங்கியவராதல் வேண்டும். வில்லிபுத்தூரர் பாடிய தமிழ்ப்பாரதத்தில் இராமாநுஜருக்கு வணக்கங் கூருமல் திருமங்கைமன்னர்க்கும் சடகோபருக்கும்மட்டும் வணக்கங்கூறியுள்ளார். இராமாநுஜர் இம்மண்ணுலகில் 120ஆண்டு ஜீவித்திருந்தபடியால் அவர் சரமதசை இற்றைக்கு 780 வருஷங்களுக்கு முன்னுகின்றது. அவர் பரமபதமடைந்த பிறகே அவரை வைணவர்கள் சமயாசாரியராக அதிகமாய் எங்கும் கொண்டாட அவர் செய்த ஸ்ரீபாஷியம் நாடெங்கும் பரவத்தொடங்கியது. அந்தப் பாஷியம் நன்ருய்ப் பரவி, பிரபலமடைந்த பிறகே - அதாவது அவர் பரமபதமடைந்த 60 அல்லது 70 வருஷங்கள் கழிந்த பிறகுதான் - அவரை எல்லாரும் சமயாசாரியராகக் கொண்டாடும் வழக்கம் நடைபெற்றிருத்தல் வேண்டும். வேங்கடநாதாசாரியர் ஸ்ரீ ராமாநுஜர் திருநாட்டிற் கெழுந்தருளி 150 வருஷங்கள் கழிந்தபிறகுதான் இம்மண்ணுலகில் தோற்றமாயினர். ஆகவே வில்லிபுத்தூரர் காலம் இராமாநுஜர் காலத்துக்கும், வேங்கடநாதாசாரியார் காலத்திற்கும் இடைப்பட்ட கி. பி. பதின் மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதியாக வேண்டும்.*

வில்லிபுத்தூரரின் கவிகளொவ்வொன்றுமே சொற்கட்டு, சந்தவின்பம், தெளிவு, தண்ணென்றிருத்தல், ஆற்ருெழுக்கு, நவரசப் பொலிவு முதலிய நயங்கள் மலிந்து சிறந்திருக்கின்றன. மாதிரிக்காகச் சில பாடல்கள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

---

* 1914ஆண்டு வெளிவந்த 'தமிழ் நூல்களின் ஆராய்ச்சி' ஒன்றில் சரித ஆராய்ச்சி வல்ல அந்நூலாசிரியர் வில்லிபுத்தூரர் காலம கி. பி. 1450-க்குப் பிற்பட்டதென்கிருர். (Vide Tamil Studies PP. 224-225.)

ஆதிபருவம்:

**சுயம்வர மண்டபத்தில் திரௌபதிக்குத் தோழியர் கன்னனைக் காட்டிக் கூறல்**

**பெண்மைக் கிரதி யெனவந்த பெண்ணு ரமுதே! பேருலகில் [னே;
உண்மைக் கிவனே; பொறைக்கிவனே; உறவுக் கிவ்னே; உரைக்கிவ
திண்மைக் கிவனே; நெறிக்கிவனே; தேசுக் கிவனே; சீலக்கிவனே;
வண்மைக் கிவனே: கன்னனெனும் மன்னன் கண்டாய் மற்றிவனே.**

உத்தியோகபருவம்: (கிருஷ்ணன் தூது)

பாண்டவர்கள் தாம் இழந்த நாட்டைப் பெறுவதெப்படி என்று கிருஷ்ணனோடு ஆலோசித்தார்கள். அப்போது,

"அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர்
வென்றஅந்நாள், அவன்முன் சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய்மீண்டீர்: வெய்யோன் உங்கள்
குருநிலத்திற் பாதியினிக் கொடாதிருந்தால்,
ஆங்கவனைக் கொன்று போரில்
இருநிலத்தை ஆளஇனித் துணிவதே
கடன், என்றான் எம்பி ரானே.

அதற்குத் தருமர்,

'குரவரையும், இளைஞரையும், குலத்துரிய
துணைவரையும் கொன்று போர்வென்
றரவநெடுங் கடலாடை அவனியெலாம்
தனியாளும் அரசு தன்னில்,
கரவுரையும் மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறும்
இரவுபகற் பலமூல சாகநுகர்ந்
துயிர்வாழ்தல் இனிது நன்றே'

என்றார்.

கோதிலான் இந்தமொழி கூறுதலும்
மாமாயன் கூற லுற்றான்:
'மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங்
கானகத்தே முடுகிச் சென்றால்
பூதலத்தோர் ஏசாரோ? புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ?
நீதியோ?' எனஉரைத்தான். ஆங்கதற்கு
நிகழ்தருமன் நிகழ்த்த லுற்றான்:
'முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்து'ழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனனாட்டின் திறம்வேண்டு;
நாடொன்று நல்கா னாகில்
'ஐந்தூர்வேண்'; டவையிலெனில்'; ஐந்திலம்வேண்';
டவைமறுத்தால் அடுபோர் வேண்டு:
சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே!'

இதைக் கேட்ட வீமன் வெகுண்டு, தருமரை நோக்கி,

'விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின்
முறையிடுநாள் வெகுளேல் என்று
மரபினுக்கும் நமக்குமுல குள்ளளவும்
தீராத வசையே கண்டாய்!
எரிதழற்கா னகமகன்றும் இன்னமும்வெம்
பகைமுடிக்க இளையா நின்றாய்!
அரவுயர்த்தோன் கொடுமையினும், முரசுயர்த்தோய்!
உனதருளுக் கஞ்சி னேனே!
'கானாள உனைவிடுத்த கண்ணிலா
அருளிலிதன் காதன் மைந்தன்
தானாளும் தரணியெலாம், ஒரு குடைக்கீழ்
நீயாளத் தருவன் இன்றே.
மேனாள்நம் உரிமையறக் கவர்ந்தபெருந்
துணைவனுனை வெறாத வண்ணம்

வாளுள வானவர்கோன் தன்பதமற்
றவன்தனக்கே வழங்கு வேனே.
'மலைகண்ட தெனவென்கைம் மறத்தண்டின்
வலிகண்டும், மகவான் மைந்தன்
சிலைகண்டும், இருவர்பொரும் திறல்கண்டும்
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும், இவள்விரித்த குழல்கண்டும்,
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல் அவன்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றாயே.'

என்றான். அப்பால்,

மைக்கால முகிலூர்தி வானவர்கோன்
திருமதலை வணங்கி நின்று
முக்காலங் களுமுணரும் முகுந்தனுக்கும்
முதல்வனுக்கும் மொழிவான் மன்னோ:
'அக்காலம் பொறுத்தவெலாம் அமையாமல்
இன்னமிருந் தறமே சொன்னால்,
எக்காலம் பகைமுடித்துத் திரௌபதியும்
குழன்முடிக்க இருக்கின் றாளே?
'தீண்டாத கற்புடைய செழுந்திருவைத்
துகிலுரியச் செயலொன் றின்றி
"நீண்டானே! கரியானே! நிமலா!" என்
றரற்றினளாய் நின்று சோர,
மாண்டார்போல் அதுகண்டு மன்னவையில்
யாமிருந்த மாசு தீர
வேண்டாவோ? வேண்டுவது மேம்படுநல்
அறமேயோ? வேந்தர் வேந்தே!"

என்றான். அப்பால், நகுலன் கூறுகிறான்:

'கானெறிபோய்க் கரந்துறைந்து கடவநாள்
கழித்ததற்பின் கான நீங்கி,

ஈனமிலா வகைவந்தார் நந்துணைவர்
எனச்சிறிதும் இரங்கா னாகில்,
மாநகரும் வளநாடும் உரிமையும்தன்
மொழிப்படியே வழங்கா னாகில்,
தானறியா தவன்பிறர்போய்க் கற்பித்தால்
அறிவனோ தரணி வேந்தே!'
நகுலனிவை உரைத்ததற்பின் நன்றெனக்கை
அமைத்தருளி 'நகுலன் சொல்லும்,
இகல்விசயன் தன்மொழியும், திறல்வீமன்
இயம்பியதும், யாவும் கேட்டோம்:
புகலரிய உணர்வுடையோய்! புகழுடையோய்!
திறலுடையோய்! புகல்நீ' என்ன
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு
மனமுருக மொழிகின் றானே.

சகாதேவன் கண்ணனை நோக்கிக் கூறுகிறான்:

'சிந்தித்த படிநீயும் சென்றாலென்,
ஒழிந்தாலென்? செறிந்த நூறு
மைந்தர்க்குண் முதல்வனிலம் வழங்காமல்
இருந்தாலென், வழங்கி னாலென்?
கொந்துற்ற குழல்இவளும் முடித்தாலென்,
விரித்தாலென்? குறித்த செய்கை
அந்தத்தின் முடியும்வகை அடியேற்குத்
தெரியுமோ? ஆதி மூர்த்தி!
'முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே!
அன்றலகை தருபா லுண்டு,
மருதிடைச்சென் றுயர்சகடம் விழஉதைத்துப்,
பொதுவர்மனை வளர்ந்த மாலே!
ஒருவருக்கும் தெரியாதிங் குன்மாயை
யானறிவேன் உண்மை யாகத்
திருவுளத்துக் கருத்தெதுவோ, அதுஎனக்கும்
கருத்'தென்றான் தெய்வ மன்னன்.

இவ்வண்ணம் சாதேவன் இயம்புதலும்
நகைத்தருளி, இகலோர் சொன்ன
அவ்வண்ணம் புகலாமல் விரகுரைத்தான்
இவன் என்ன அவனோ டாங்கோர்
பைவண்ண மணிக்கூடந் தனியெய்திப்
'பாரதப்போர் பயிலா வண்ணம்
உய்வண்ணம் சொல்லுகநீ உபாயம்' எனத்
தொழுதுரைப்பான் உரங்கொள் வேலான்:

'நீபார தவமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா!
கோபாலா! போரேறே! கோவிந்தா! நீயன்றி
மாபார தமகற்ற மற்றார்சொல் வல்லாரே?

'பாராளக் கன்னன்; இகற்பார்த்தனை முன்கொன்றணங்கின்
காரார்குழல் களைந்து, காலிற் றளை பூட்டி,
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்,
வாராமற் காக்கலாம் மாபாரதம்' என்றான்.

'முன்னம்நீ கூறியவை எல்லாம் முடித்தாலும்
என்னைநீ கட்டுமா றெவ்வா' றெனமாயன்,
'உன்னைநீ தானும் உணராதாய்! உன்வடிவம்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யான்' என்றான்

சகாதேவன்.

மாயவனும் அன்பன் மனமறிவான் 'கட்டுக' என்
றாயவடிவு பதினா றாயிரம் கொண்டான்.
தூயவனும் மூலமாம் தோற்றமுணர்ந் தெவ்வுலகும்
தாய அடியிணைகள் தன் கருத்தினுற் பிணித்தான்.

கன்ன பருவம்:

கன்னன் போர்க்களத்தில் மடியும்போது பிராமண
வடிவாய் வந்த கிருஷ்ணனுக்குத் தானமளித்தல்.

'ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்;

பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்:
ஓவிலா தியான்செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன் கொள்கநீ உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரிலன் என்றாற்
புண்ணியம் இதனினும் பெரிதோ!'
மல்லலந் தொடையல் கிருபனை முனிவன்
மகிழ்ந்துநீ வேண்டிய வரங்கள்
சொல்லுக உனக்குத் தருதுமென் றுரைப்பச்
சூரன்மா மதலையும் சொல்வான்:
'அல்லல்வெவ் வினையால் இன்னமுற் பவமுண்
டாயினும் ஏழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயநீ யளித்தருள்' என்றான்.

# வரதுங்கபாண்டியன்

பாண்டியர் பரம்பரையில் ஐந்நூறு வருடங்களுக்கு முன்னே வரதுங்கபாண்டியன், அதிவீரராமபாண்டியன் எனச் சகோதரர் இருவர் பிறந்தனர். இவர்களில் மூத்தவனாகிய வரதுங்கபாண்டியன் மனைவியுடனே தவமேற்கொண்டு சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதும் திருக்கருவை நல்லூரில் வசித்து அங்கே கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானுக்கு வழிபாடு செய்வதுமாகக் காலங் கழித்து வந்தான். இளையவனாகிய அதிவீர ராமபாண்டியன் பகையரசரை வெற்றிகொண்டு சிற்றின்பப் பிரியனாய்த் தென்

காசியில் காலங்கழித்திருந்தான். இவ்விருவரும் சரஸ்வதி கடாட்சத்தால் அவரவர் திறத்தின்படி, தமிழிற் பலபாடல்கள் பாடிக்கொண்டிருந்தனர்.

வரதுங்க பாண்டியன் சைவபுராணங்களில் சாரமான பிரமோத்தரகாண்டம் என்னும் அரியநூலை மொழிபெயர்த்தும், திருக்கருவை நல்லூரில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்குப் பாமாலையாகத் திருக்கருவை வெண்பா வந்தாதி, திருக்கருவைக் கலித்துறை யந்தாதி என்னும் பிரபந்தங்களைப் பாடியும் சிவநேசச் செல்வனாய்ச் சிறப்புற்றிருந்தனன். அப்போது அதிவீரராமபாண்டியன் நளசரிதத்தைத் தமிழிற் பாடிக்கொண்டிருந்தனன். அவன் அதைப் பாடி முடிப்பதற்கு முன்னே அதனை வரதுங்கபாண்டியனிடங் கொண்டு போய்க் காட்டினன். அதைக் கண்ட வரதுங்கன் "இதென்ன புண்ணியமா? புருஷார்த்தமா? அரனைத் துதியாமல் நம்மைப் போன்ற அரசனொருவன் கதையைப் பாடிக் காலங்கழிப்பது வீண்காரியமே" என்றனன். அவ்வார்த்தையைக்கேட்டு அதிவீர ராம பாண்டியன் சலிப்படைந்து எடுத்ததை முடித்துவிடுவோம் என்று அந்தக் காவியத்தை ஒருவாறு முடித்துவிட்டான். அதனால் அது பின்பாகம் இரசம் இளைப்பதாயிற்று.

அங்ஙனம் முடிந்த பிறகும் அவ்வளவோடு அமையாது அதைக் கொண்டுபோய்த் தமையன் மனைவியிடங் கொடுத்துப் பார்வையிடும்படி வேண்டினன். கூர்மபுராணத்தைத் தமிழிற் பாடிய அவ்வரசி புன்சிரிப்புடனே அதைப் பார்வையிட்டுத் திருப்பிக் கொடுத்தாள். அவளுடைய அபிப்பிராயத்தைக் கூறும்படி அதிவீரராமன் கேட்டபோது அவள் "வேட்டை நாய் வேட்டைமேல் செல்லும்போது வேகமாய்ச் செல்லும்: திரும்பி வரும்போது ஏங்கியிளைத்து

வருமன்றோ? அதுபோலும் உமது காவியம்" என்றனள். செவியிலே நாராசம் புகுந்தது போல் அந்த வார்த்தையைக் கேட்டவளவில் அதிவீரராமபாண்டியன் கோபாவேசத்துடன் தன் நகரடைந்து 'தமையனோ காவியம் நன்கு முடிகிறதைக் கெடுத்தான். அவன் மனையாட்டியோ இங்ஙனம் கொடுஞ்சொல் சொன்னாள்' என்று நினைந்து நினைந்து வீராவேசங் கொண்டு நால்வகைப் படைகளைக் கூட்டிக் கொண்டு தன் தமையன்மீது படையெடுத்துப் புறப்பட்டுப்போனான். அப்போது வரதுங்கபாண்டியன் அச்செய்தியைக் கொண்டுவந்த தூதனிடம் "நீ மார்த்தாண்டன் மைந்தனையும் விபீஷணனையும் பஞ்சவரிற் பார்த்தனையும் எண்ணாமல் பரதராகவருடைய அன்பை எண்ணுவாயாக" என்ற கருத்தமைந்த ஒரு வெண்பாவை எழுதியனுப்பினன். அதைக் கண்ட அதிவீர ராம பாண்டியன் அண்ணனைச் சென்று வணங்கி உச்சீவிக்கும் உபாயம் அறிவிக்குமாறு வேண்டினான். வரதுங்கபாண்டியன் "வடமொழியிலுள்ள காசிகாண்டத்தைத் தமிழில் மொழி பெயர்த்திடுக. உன் குற்றமெல்லாம் அதனால் ஒழியும்" என்றனன். பின் அதிவீர ராமபாண்டியன் அண்ணியாரடியில் நமஸ்கரித்துக் கண்ணீருகுத்துத் தான் செய்த பிழையைப் பொறுத் தருளுமாறு வேண்டினன். அப்பால் அதிவீரராமபாண்டியன் தமையனுடைய நியமனத்தின்படி காசிகாண்டத்தை மொழிபெயர்த்து நறுந்தொகை என்னும் நீதி நூலும் இயற்றிப் பொன்றாப் புகழ்பெற்றனன். பிறகு வரதுங்க பாண்டியன் திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி பாடிச் சிலகாலங் கழித்துச் சிவசாயுச்யம் பெற்றனன்.

அதன் பிறகு அதிவீர ராம பாண்டியன் முப்பது பாடலடங்கிய அம்பிகைமாலை என்னும் சிறுநூலும் இலிங்க

புராண மொழி பெயர்ப்பும் இன்னுஞ் சில நூல்களும் இயற்றினன்.

வரதுங்க பாண்டியன் இயற்றிய கவிகளில் சிலவற்றை எடுத்துக் காட்டுவோம்:

பிரமோத்தரகாண்டம்:

### பரமசிவனையே வழிபடவேண்டுமென்பது

கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்;
  கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்;
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்;
  பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்;
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னா;
  பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்;
அண்ணல்பொலங் கழலிணைக்கு நெஞ்சமே நெஞ்சம்;
  அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை.

### இன்பதுன்பங்கள்

இன்பம்வந் துற்ற காலை இருங்களி எய்தல் தானும்,
துன்பம்வந் துற்ற காலைத் துயருழந் தழுதல் தானும்,
மன்பதை புரக்கும் வேந்தே ! அறிவிலார் மாட்சி ; நல்லோர்
துன்பமும் இன்பம் தானும் தொல்வினைத் தொடர்ச்சி என்பார்.

### புதல்வர்ப்பேறு

உந்து நீர்க்கடல் உடுத்த பார்முழுவதும் ஒருங்கே
வந்து தாள்தொழும் அரசியல் வளமெலாம் பெறினும்
இந்தி ராதியர் பெரும்பதத் திருக்கையெய் திடினும்
மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே.

### யாக்கை நிலையாமை

பண்டை வாசனை தொக்க பயிற்சியால்
கொண்ட காயம் நிலையெனக் கொள்வரோ?

அண்ட ரேனும் பிறப்புள தாமெனின்
விண்டு காயம் இறப்பது மெய்யரோ!

### இராச இலக்கணம்

உற்றவூ றஞ்சாப் படையும் உயர்குடியும்
முற்றுலவாப் பைங்கூழும் முன்வருதல் சேமிக்கும்
பெற்றி யமைச்சும் உதவும் பெருந்துணையும்
கொற்ற அரணும் உடையானே கோமகனே.

### இராசநீதி

தேவர் நிலைசடவார்; மேலோர் திறம்பிழையார்;
நாவி னிரண்டுரையார்; நன்கல் லவைபுரியார்;
காவன் முறைதிறம்பார்; காமச் செயல்பெருக்கார்;
பூவ லயங்காவல் புரியும் புரவலரே.

தனிப்பாடல்: (மரணகாலத்தில் மனைவிக்குக் கூறியது.)

அஞ்சலென்ற கரதலமும் கணபணசங் கணமும்
அரைக்கிசைந்த புலியுடையும் அம்புலிச்செஞ் சடையும்
கஞ்சமலர்ச் சேவடியும் கனைகழலும் சிலம்பும்
கருணைபொழி திருமுகமும் கண்கள்ஒரு மூன்றும்
நஞ்சையுண்ட மணிமிடறும் முந்நூலும் மார்பும்
நலந்திகழ்வெண் ணீற்றொளியும் மறிமானும் மழுவும்
பஞ்சடிச்சிற் றிடையுமையாள் பப்பனைபா கமுமாய்ப்
பால்வண்ணன் உளத்திருக்கப் பயமுண்டோ எமக்கே.

இதைக் கேட்டு இவர் மனைவி கூறிய செய்யுள் வருமாறு:

ஆக்கையெனும் புழுக்குரம்பை அணைந்தணையாப் பொருளை
அருளொளியைப் பராபரத்துக் கப்புறமாம் அறிவை
நீக்கமற மயிர்முனைக்கும் இடமறவெங் கெங்கும்
நிறைந்துநின்ற புழுபுழுதலை நினைவிலெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் செய்தநந்தம் தமக்குனறகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியில் அடைப்பாம்.

# பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

'திவ்யகவி' என்று சிறப்புற்ற பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் சோழ நாட்டில் திருமங்கை யென்னும் ஊரிலே வைணவப் பிராமண குலத்திலே பிறந்தவர். இவர் இளவயது முதல் தமிழில் இலக்கண இலக்கியங்களில் பிரிய முள்ளவராய், தக்க ஆசாரியரை அடுத்துப் பலநூல்களையும் கற்றுணர்ந்து செம்பாகமாகத் தமிழ்க் கவி பாடும் புலவரானார். இவரது கல்வித் திறத்தைக்கண்டு மதுரையில் அக்காலத்தில் அரசு புரிந்த திருமலைநாயகர் என்பவர் தம் அரமனையில், இவரை ராயசவேலையில் அமர்த்திக் கனப்படுத்தினார். இப்பிள்ளைப் பெருமாள் இராமாநுஜநூற்றந்தாதி பாடிய திருவரங்கத் தமுதனாரின் வம்சத்திற் பிறந்தவர். கோனேரி அப்பனையங்கார் என்பவர் இவர் பேரர். இது சீரங்கநாயகியார் ஊசற்றிரு நாமத்தால் விளங்குகின்றது. இவரது குலத்தில் இவருக்கு முன்னாகவும் பின்னாகவும் பக்திமிகுந்த கவிபாடும் பாகவதர்கள் பலர் இருந்தனர் என்று தெரிகிறது. இங்ஙனம் தொன்று தொட்டுச் சிட்டாசாரமுள்ள வைணவ குலத்தில் தோன்றியவ ராதலால், பிள்ளைப்பெருமாளையங்கார் குலத்துக்கேற்ற ஒழுக்கமுள்ளவராய் விளங்கினார்.

இவர் வீட்டுக்கு வேடங் கொள்ளாது உண்மையாகவே மனத்திடங்கொண்ட வீரவைணவர். இவர் திருமாலின் சரண கமலங்களில் ஈடுபட்டுப் பக்தி மேலீட்டால் தமது உபாசனாமூர்த்தியாகிய திருவரங்க நாதனையே பரம்பொருளெனக் கொண்டு வேறு வைணவ மூர்த்தங்களில் மனமோடாது திடமாய் நின்றமையால் இவரை வீரவைணவரென

வழங்க இடமுண்டாயது. அரங்கனை யன்றி மற்றொரு தேவனை நாவினால் துதியேனென்ற துணிபுரைக்கும் செய்யுட்கள் பல. அவற்றுள் ஒன்று வருமாறு:

ஆகம திக்கு முகமேன் முகமுடை யானயன்வாழ்
ஆசம திக்கு நவநீதக் கள்வ வவனிகொள்வார்
ஆகம திக்குளஞ் சேரரங் காவுனை யன்றித்தெய்வம்
ஆக மதிக்கு வெண்ணே னடியேன்பிற ராரையுமே.

இவர் பாடிய பின்வரும் திருவரங்கக் கலம்பகப்பாவால் சாதி குலம் பாராட்டாத இவரது மனப்பெருமை விளங்கும்:

பாதியா யழுகிய கால்கைய ரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியா யரவணையா யென்ப ராகில்
அவரன்றோ யாம்வணங்கு மடிக ளாவர்;
சாதியா லொழுக்கத்தான் மிக்கோ ரேனுஞ்
சதுர்மறையால் வேள்வியால் மிக்கோ ரேனும்
போதினான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே.

கோயிலென்பது, வைணவருள் அரங்க நகரைச் சுட்டும் பெயர். அரங்கனைப் புகழ்வாரும் பணிவாருமே வைகுண்டத்திலுள்ள திருமாமணி மண்டபத்தைப் பெற்றவராவரென்று இக்கலம்பகத்திலே வேறொரு கவியிலும் விளக்கப்பட்டுள்ளது. அக்கவி வருமாறு:

கற்றா ரெனினும் பதினா லுலகுங்
கண்டா ரெனினுந் தண்டா மிகுபற்
றற்றா ரெனினுந் திருமா லடியா
ரல்லா தவர்வீ டில்லா தவரே;

பொற்றா மரையாள் கணவன் றுயிலும்
பொற்கோ யிலையே புகழ்வார் பணிவார்
மற்றா ரெனினும் பெற்றா ரவரே
வானோர் திருமா மணிமண் டபமே.

இவர் கவித்திறம் விளங்க இவர் பாடிய பாடல்களிற் சிலவற்றை இங்கெடுத்துக் காட்டுவோம்.

புயநான் குடையானைப் பொன்னரங்கத் தானை
அயனுந் திருவுந்தி யானை—வியனும்
பரகதிக்குக் காதலாய்ப் பாடினேன் கண்டீர்
நரகதிக்குக் காணுமை ஞான்.

சிந்திக்கத் தித்திக்குஞ் செவ்வாய் துவர்த்துப்பாம்
புந்திக்கு ளேயின் புளிமேவு—நந்தம்
கருவரங்கக் கைத்தழலுங் காவிரியி னூடே
திருவரங்கத் தேவளருந் தேன்.

மண்டலமும் விண்டலமு நின்றவட குன்றமும்
வளைந்த மலையுங் கடலுமே
தண்டமு மகண்டமு மயின்றவர் துயின்றரு
ளரும்பதி விரும்பி வினவில்
கொண்டல்கு முறங்குட கிழிந்துமத குந்தியகில்
கொண்டுநுரை மண்டி வருநீர்
தெண்டிரை தொறுந்தரள மும்கனக முஞ்சிதற
தென்றிரு வரங்க நகரே.

கரைபொரு தொழுகுங் காவிரி யாறே,
ஆற்றிடைக் கிடப்பதோ ரைந்தலை யரவே,
அரவஞ் சுமப்பதோ ரஞ்சன மலையே,
அம்மலை பூத்ததோ ரரவிந்த வனமே,
அரவிந்த மலர்தொறு மதிசய முளவே:
கடல்விளிம் புடுத்த கண்ணகன் ஞாலம்
உடன்முழு தளந்த தொருதா மரையே;

வகிரிளம் பிறையான் வார்சடை தேங்கப்
பகிரதி கான்றதோர் பங்கே ருகமே;
யாவையும் யாரையும் படைக்க நான்முகக்
கோவை யீன்றதோர் கோக னசமே;
திருமகட் கினிய திருமனை யாகிப்
பருமணி யிமைப்பதோர் பதும மலரே;
சடைத்தலை தாழ்த்துச் சங்கர னிரப்ப
முடைத்தலை தவிர்த்ததோர் முளரிமா மலரே;
ஆங்குமண் டோதரி யணிந்த ங் கலநாண்
வாங்கவில் வாங்கிய வனசமு மொன்றே;
விரிந்தபுக ழிலங்கை வேந்தற்குத் தென்றிசை
புரிந்தருண் மலர்ந்ததோர் புண்ட ரீகமே;
மண்டிணி ஞாலமும் வானமு முட்பட
கடைசிவந் தகன்று கருமணி விளங்கி
இடைசில வரிபரந் தினியவாய் நெடியவாய்
இன்பந் தழீஇய விருபெருங் கமலம்
துன்பந் தழீஇய தொண்ட னேனையும்
உவப்புட னொருகா னோக்கிப்
பவக்கடல் கடக்கும் பரிசுபண் ணினவே.

ஒருபொரு ளல்லேன்; இருவினை யுடையேன்;
உனதுதொண் டெனுந்துறை குளித்துன்
பெருகுதண் ணளியின் பாசந்தொட் டிழிந்து
பெரியதோர் முத்தியான் பெற்றேன்:
திருவுமா மணியுஞ் சங்கமு மேந்திச்
செய்யதா மரைபல பூத்துக்
கருநிற முண்டத்தாய் நதிபொரு தரங்கங்
கலந்ததோர் கருணைவா ரிதியே.

இவர் பேரர் பாடிய சீரங்கநாயகியார் ஊசற்றிருநாமத்தில் சில செய்யுட்கள் காட்டுவோம்:

தங்கமலர்ப் பந்தரின்கீழ்ப் பதும ராகத்
தூணிறுத்தி வயிரவிட்டந் தொடுத்து மீதிற்

றங்கநெடுஞ் சங்கிலிவிட் டின்மா ணிக்கத்
தவிசுபுனைந் தலங்கரித்த வூசன் மீதின்
மங்கல நாண் டிருவாவா ராடி ரூசல்!
மதிலரங்கர் தமக்கினியா ராடி ரூசல்!
செங்கமல மாளிகையா ராடி ரூசல்!
சீரங்க நாயகியா ராடி ரூசல்!
கலைமடந்தை வணங்கியொரு வடந்தொட் டாட்டக்
கற்புடைய வள்ளியொரு வடந்தொட் டாட்ட
மலைமடந்தை பரிவிலொரு வடந்தொட் டாட்ட
வானவர்கோன் மடந்தையொரு வடந்தொட் டாட்ட
அலர்மடந்தை நிலமடந்தை யுலகம் வாழ
அருண்மடந்தை பொருண்மடந்தை யழகார் நெற்றிச்
சிலைமடந்தை திருமடந்தை யாடி ரூசல்!
சீரங்க நாயகியா ராடி ரூசல்!
காரனைய திருவரங்க மணவா ளற்குக்
கண்களிப்ப மனமுருக வறிவு சோர
மூரலெழப் புளகமுறப் புயம்பூ ரிப்ப
முகமலர மெய்குழைய மோக மேற
ஆரமுதே பசுங்கிளியே முத்தே பொன்னே
யன்னமே யென்னம்மே யழகின் பேறே
சீரியசிற் றிடையணங்கே யாடி ரூசல்!
சீரங்க நாயகியா ராடி ரூசல்!

நம்பெருமாள் குமாரர் எனப் பட்டருக்குப் பெயர்வாய்த்தது போல் இப்பிள்ளைக்கும் பெயர்வாய்த்தது. இவரும் பெருமாளின் அருளால் தோன்றியவராதலின் பெருமாளின் பிள்ளையாயினர். அம்மொழிகள் மொழி மாற்றாய், பிள்ளைப் பெருமாள் என்றாயின. பிள்ளைப்பெருமாள் என்பது ஸ்ரீ கண்ணன் பெயரெனக் கொள்ளுதலும் ஒரு நன்னயப் பொருளாம். அழகிய மணவாளனும் அரங்கர்க்குத் தாசனுனவ னென்று பொருள்படுவ தாகிய மணவாள தாசனென்பதும்

பிள்ளைப் பெருமாளுக்கு மற்றொரு பெயராகின்றது. நாமகரணஞ் செய்த பெயர் "ரங்கநாததாசன்" என்பது. மணவாளன் என்பது அரங்கன் பெயராதலால் மணவாள தாசன் ரங்கநாததாசன் என்பன ஒரே பொருள் கொண்ட மொழிகளாம். வைணவ அந்தணர்களிலெல்லாம் இவர் ஐயங் கொண்டோங்கும் சிங்கம் போன்றவராதலின் பிள்ளைப் பெருமாள் எனப்பெற்றார் என்பர் ஒரு சாரார். இவர் யமக கவி பாடுவதிற் சிறந்தவர்; வேறுவகைக் கவி பாடுவதிலும் பாலுந்தேனு மமுதுங் ஙக்கக்கும்படி பாட வல்லவராதலிற் கவிநயமுணரும் புலவர்களெல்லாம் திவ்வியகவி எனக் கொண்டாடத்தக்க சிறப்பு வாய்ந்தவர்.

ஒருநாளிரவில் திருமால் இவர் கனவில்தோன்றி உலக முண்டு உமிழ்ந்தவன் தானே என்று அறிவித்து திருவேங் கட முடையாரையும் பாடும்படி கட்டளையிட்டுவிட்டுமறைந் தருளினர். அதை இவர் அசட்டை செய்து அரங்கனைப் பாடிய என தருமை வாக்கால் மற்றொரு குரங்கனையும் பாட மாட்டேனென்றார். "மந்திபாய் வடவேங்கடமாமலை" என்று பாடல் பெற்றிருப்பதால்அங்குள்ள மூர்த்தியை இவர் குரங் கன் என்றார். திருமாலின் கட்டளையை நிராகரித்ததினல் இவர்க்குக் கண்டமாலை நோயுண்டாயிற்று. இவர் திடுக்கு ற்று உடனே திருவேங்கட மாலை, திருவேங்கடத்தந்தாதி என் னும் இரண்டு பிரபந்தங்கள் பாடினர். கண்டமாலைநோய் முதலில் தோற்றிய தெப்படியோ அப்படியே திருமால் அருளால் மறைந்து விட்டது. பிறகு இவர் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி அழகரந்தாதி முதலிய நூல்களையும் பாடினர்.

இவர் பாடிய பிரபந்தங்களாவன:—

1. திருவரங்கக்கலம்பகம் (பாடல்கள்-105)
2. திருவரங்கத்தந்தாதி (பாடல்கள்-105)
3. திருவரங்கத்துமாலை (பாடல்கள்-112)
4. திருவேங்கடமாலை (பாடல்கள்-103)
5. திருவேங்கடத்தந்தாதி (பாடல்கள்-101)
6. அழகரந்தாதி (பாடல்கள்-101)
7. ஸ்ரீரங்கநாயகர் ஊசற்றிருநாமம்(பாடல்கள்-32)
8. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி(பாடல்கள்-114)

ஆகப்பாடல்கள் 773

இவ்வெட்டுப் பிரபந்தங்களும் தமிழ் நாட்டில் அஷ்டப் பிரபந்தமென வழங்கப் பெறுகின்றன.

இவ்வெட்டன்றித் திருநறையூர் நம்பிவிஷயமாய் மேகவிடுதூது ஒன்று பாடியுள்ளார். அது 205 கண்ணிகளடங்கிய ஒரு கலிவெண்பா.

இவர் தமது வீரவைணவ நிலையை நாட்டிப் பற்பல சமயங்களிற் பாடிய தனிப்பாடல்கள் 35 அடங்கிய சிறுநூல் ஒன்றும் வழங்கிவருகின்றது. அதன் பெயர் பரப்பிரம விவேகம் என்பது.

திருமலைநாயகர் என்பவர் கி-பி-1623ஆ முதல் 1659-வருஷம் வரை 36-வருஷ காலம் மதுரையில் அரசாண்டு வந்தார். இவரிடத்தில்தான் ஐயங்கார் ராயசவேலையிலமர்ந்திருந்தார். ஆதலால் நாயகர் காலத்தைக் கொண்டு ஐயங்கார் காலம் நிர்ணயமாகின்றது. நடுவயதிலோ அதற்குச் சற்று முன்போ இவர் மதுரையில் நாயகரிடம் ராயசவேலையில் அமர்ந்திருத்தல் வேண்டும். இவர் கல்வித்திறம் வெளிப்படச் சுமார் 25ஆ காலம் சென்றிருக்குமென்பது

சம்பாவிதமே. ஆகவே, ஐயங்கார் காலம் சற்றேறக் குறைய பதினேழாவது நூற்றாண்டின் முற்பகுதி ஆகவேண்டும்.*

இவர் பிறப்பொழுக்கம் குன்றாமல் ஆசாரிய பக்தி, திருமால் பக்திகளிற் குறைவின்றிப் பாகவதசிரோமணி யாய் மதுரையில் வாழ்க்கை நடத்திவந்தார். அக்காலத்தில் ஓரற்புதம் நடந்தது. நாயகர் பலர் சூழ ராஜசபையி லிருக்கையில், தமது வேலையைச் செய்துகொண்டிருந்த ஐயங்கார் அவர்களிடையே திடீரென்றெழுந்து தமது உத்தரீயத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு இரண்டு கைகளினாலும் 'கிருஷ்ணகிருஷ்ண' என்று தேய்த்தார். அங்குள்ளாரிவரை நோக்கி 'என்செய்தீர்? பிரமைகொண்டீரோ?', என்று கேட்டார்கள். 'நம்பெருமாள் திருவரங்கத்தில் திருத்தேர்கொண்டு வீதியில் எழுந்தருளுகையில் தேர்ச் சீலையில் கைத்தீவர்த்தியின் தீப்பற்றி எரிந்ததை அவித்தேன்' என்று ஐயங்கார் மறுமொழி பகர்ந்தார். இதைக் கேட்டோர் ஐயங்கார் சித்தப்பிரமை கொண்டனரென்றனர். நாயகர் இதனுண்மையை ஒற்றரையனுப்பி ஸ்ரீரங்கத்தில் விசாரித்தபோது, ஐயங்கார் கூறியது உண்மையே என்று தெரியவந்தது. ஐயங்கார் அந்நகரில் அதே காலத்தில் தேர்ச்சீலையை அவித்ததைப் பலரும் கண்டதுண்டென்றும் கூறுவர்.

அவ்வற்புதத்தைக் கேட்டவுடனே நாயகர் ஆனந்த பரவசராய் ஐயங்காரை அழைத்து அவரை வலம் வந்து தண்டனிட்டு நின்று 'நீர் ஒரு மகான்; உம்மிடம் எளியேன்

* பிற்கால ஆராய்ச்சியால் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் திருமலை நாயகர் காலத்தவர் அல்லர் என்றும், இவரது காலம் பதின்மூன்றாவது நூற்றாண்டுக்குப் பிற்பட்டதன்றென்றும் கொள்ள இடம் இருக்கிறது.

வேலை வாங்கியதை மன்னித்தருளும். இனி, திருவரங்க நகரிலேயே போய் அரங்கனை வாழ்த்திக்கொண்டு தலவாசம் செய்திரும். அங்கே உமக்கு வேண்டிய உபசரணைக்கும் தங்குமிடத்திற்கும் தக்க ஏற்பாடுகள் செய்வேன்' என்று கூறி அவரை வாகனத்திலேற்றி வாத்திய கோஷத்துடன் அரங்கநகர்க்கு அனுப்பிவிட்டார். பிறகு அரசர் தாமே அரங்கத்திற்கேகி ஐயங்கார் சௌகரியத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் நேரிற் செய்து களித்து ஐயங்காரிடத் தனுமதிபெற்று மதுரைக்குத் திரும்பினர். இதன் பிறகு தான் ஐயங்கார் பல பிரபந்தங்கள் பாடித் திவ்யகவியெனப் பலருங் கொண்டாடும் நிலைபெற்றனர்.

இவர் தமக்கு மிகுந்த தள்ளாமை வரும்வரையில் ஜீவித்திருந்தமையால் இவர் வயதை உத்தேசம் எழுபதாண்டெனக் கொள்ளலாம். ஆயுளின் பின்பாதியை யெல்லாம் இவர் திருவரங்கத் தலவாசத்திலேயே கழித்தவர். இவர் காலத்தில் ஆனைக்காவிலும் சிதம்பரத்திலு மிருந்த சைவாபிமானிகள் இவர் அமுதவாக்கைக் கண்டு பொறாமை கொண்டு அடிக்கடி இவரைச் சிற்சில கவிதைவாயிலாக அவமதித்து வரம்புகடந்து சென்றமையால் இவர் பரப்பிரம விவேகம் என்னும் நூலைப் பாடினார். இவ்வீரவைணவர் காலம் இன்னும் எத்தனை நாள் நீடிக்கும் என்று அவர்கள் பெருங்கவலை கொண்டிருந்தனர். ஒரு நாள் "அழிபிரமர் வாழ்நக ரரங்கமல்லதில்லையே*" என்னும்வாக்கியமெழுதப்பெற்ற ஓலைச்சீட்டை ஒருவர் சிதம்பரத்திலிருந்து அரங்கத்தில்

* இதன் பொருள் ; அழிபிரமர்-அழிகின்றகடவுள் ; வாழ் நகர்-வாழ்கின்ற நகரம் ; அரங்கம அல்லது இல்லையே-அரங்கத்தைத்தவிர வேறுஇல்லை. அல்ல என்பதற்குப் பின் புள்ளி குத்தினால், தில்லை அல்லது சிதம்பரமே 'அழிபிரமர்வாழ்' நகராகும்.

ஐயங்காரிடம் காட்டிவரும்படி ஓர் ஆள்வசம் அனுப்பினார்; ஐயங்கார் அச்சீட்டைவாங்கிப் பார்த்துவிட்டு 'அரங்கமல்ல' என்றதன் பின் ஒரு குத்து எழுத்தாணியாற் போட்டு அதைத் திருப்பிக்கொடுத்து அனுப்பியவரிடம் கொடுக்கும்படி சொல்லியனுப்பிவிட்டார். இவர் 80 வயதளவும் ஜீவித்திருந்தாரென்பது கர்ணபரம்பரை.

இம் மகானின் பக்தியிலே எத்திறத்தும் யாராலும் ஏத்தற் குரியதே. இவர் வீரவைணவராலும் வலுவிற் சமயவாதம் செய்யப் போவதில்லை. தம்மிடம் வந்து எவரேனும் விஷ்ணுதூஷணஞ் செய்யப்புகின் அவரை எளிதில்விடாது திருமாலின் சிறப்பைக் கூறுதலே இவர் தன்மை.

திருவானைக்காவி லுள்ளார் ஐயங்கார்வாயால் சிவபிரானைப் பாடுவிக்க வேண்டுமென்று யோசனை செய்துகொண்டு ஒரு நாள் அரங்க ராலயத்து விசுவரூபப் பசுவொன்று தங்கள் கொல்லையில் வந்து மேய்ந்த தென்று ஆனைக்காவிலேயே அதைக் கட்டிவைத்து ஐயங்கார் வரில் அதை விடுப்போ மென்றனர். ஐயங்கார் அவர்களைப் பசுவுடனழைத்து வரில் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்குவேனென்று அறிவித்தனர். அவர்களும் இதுவே தருணமென்று அதிகாலையிற் பசுவுடன் ஜயவிஜயர்கள் நிற்கும் மண்டபத்தருகில் வந்தனர். ஐயங்கார் பசுவைக் கோயிற் றினமானக்கோலம் காணவிட்டுவிடவேண்டு மென்று சைவர்களை வேண்டிக் கொண்டனர். தங்கள் வாயால் எமது சிவபிரான் மீது ஒரு பாடல் பாடினால் கபிலையை விட்டு விடுகிறோ மென்றனர் சைவர்கள். "அரங்கர் தரிசனம் தடையாகின்றது. பசுவை விட்டுவிடுவீராகில் உடனே யாம் பாடுகின்றோம்" என்றார்

ஐயங்கார். "இஃது உண்மையானால் பாட்டின் இரண்டொரு சீரையாயினுங் கூறுதலாகாதோ?" என்று சைவர்கள் கூறினர். உடனே ஐயங்கார் "மங்கை பாகன்" என்று தம் வாயால் இரண்டு சீரை அருளிச்செய்தனர். இதனைச் சைவர்கள் காதாரக் கேட்டுக் களித்துப் பசுவை விடுத்தனர். எல்லோரும் விசுவரூப தரிசனம் செய்தார்கள். பிறகு ஐயங்கார் தாம் அடியெடுத்த பாடலைப் பின்வருமாறு பாடினார்:

மங்கை பாகன் சடையில் வைத்த கங்கை யார்ப தத்துநீர்?
வனச மேவு முனிவ னுக்கு மைந்த னன தில்லையோ?
செங்கை யாலி ரந்தவன்க பால மார கற்றினர்?
செய்ய தாளின் மலர ரன்சி ரத்தி லான தில்லையோ?
வெங்கண் வேழ மூல மென்ன வந்த துங்கள் தேவனோ?
வீறு வாண னமரி லன்று விறல ழிந்த தில்லையோ?
அங்கண் ஞால முண்டபோது வெள்ளி வெற்ப கன்றதோ?
ஆதலா லரங்க னன்றி வேறு தெய்வ மில்லையே.

சைவர்கள் இப்பாடலைக் கேட்கப் பொறாராகி, ஐயங்காரின் தந்திரத்தை இகழ்ந்து ஆனைக்காவிற் கேகினர். இவ்வகையாய் இவர் பாடியுள்ள மற்றொரு கவியை எடுத்துக் காட்டிவிட்டு இவர் சரித்திரத்தைப் பூர்த்தி செய்வோம். அக் கவி வருமாறு:

மத்தக் கரியைக் கராப்பற்றி நின்றதோர் வாவியுள்ளே
சித்தந் தெளிந்து மூறையிடும் போது செழுந்துளவக்
கொத்துக் கிளர்முடிக் கோவிந்த வென்றது கூப்பிட்டதோ
செத்துக் கிடந்தன வோகெடு வீருங்கள் தெய்வங்களே.

இப் பிள்ளையார் வீரவைணவ ராதலின், இவர் சரித்திரத்தின் ஆதியில் வீரவைணவரெனக் காட்டி முடிவுரைக்குமிடத்தும் வீரவைணவப் பாடல்களைக் காட்டினோம்.

இவர் அரங்க ராலயத்துள் ஒருநாள் வைகுண்டநாதன் சந்நிதி முன்பே சேவை செய்துகொண்டிருக்கையில் ஒரு கிழப்பசு வந்து இவரை முட்டியது. உடனே பின் வரும் வெண்பாவைப் பாடிக் கொண்டே ஐயங்கார் அரங்கனடியிற் சேர்ந்தனர்:

துளவ துளவவெனச் சொல்லுஞ்சொற் போச்சே;
அளவில் நெடுமூச்சு மாச்சே; முளரிக்
கரங்கால் குளிர்ந்தவே; கண்ணும்பஞ் சாச்சே
இரங்கா யரங்கா வினி.

இவர் அரங்கரையே நித்தநித்தம் நினைந்து பக்திமிகுந்து நின்றவாறே இறக்கும் தறுவாயிலும் அரங்கனை யுச்சரித்துக் கொண்டே நற்பதம் பெற்றமை வியப்பே!

---

# கம்பர்

ஸ்ரீராமபிரானுடைய புண்ணிய சரித்திரத்தைச் சொல்ல, ஆரிய பாஷையில் ஆதி காவியமாகிய வால்மீக ராமாயணம்போலத் தென்மொழியாகிய தமிழ்ப்பாஷையில் கம்பராமாயணம் என்னும் இனிய காவியம் எங்கும் பிரசித்தமாக வழங்கி வருகின்றதல்லவா? இந்தத் தமிழ் இராமாயணம் செய்தவர் 'புவிச்சக்கரவர்த்திகள் போற்றும் கவிச்சக்கரவர்த்தி' என்று தமிழ் மக்கள் அனைவரும் புகழ்ந்தெடுத்துப் பாராட்டும் கம்பர் என்னும் கவிசிரோமணியே. கம்பரால் செய்யப்பட்டதனாலேயே இவ்விராம சரிதைக்குக் கம்பராமாயணமெனப் பிரசித்தியுண்டாயிற்று. 'கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்று யாவரும்

வியந்து கூறும்படி இவர் பிரபல வித்துவானனதும், பிறகு இராமாயணம் பாடி அரங்கேற்றியதும் முதலிய வரலாறு கள் யாவரும் கேட்டு வியக்கத்தக்கனவா யிருக்குமாதலால் அவற்றை ஒருவாறு சுருக்கமாய் இதனடியில் எழுது கிறேம்:

இவர் இராமாயணம் பாடுவதற்காகப் பட்ட பிரயாசை அத்தனை அதிகமல்ல; அக் காவியத்தில் அடங்கிய பதினு யிரம் பாக்களையும் எளிதிலே பாடி முடித்துவிட்டார். ஆயி னும் அதனை அரங்கேற்றுவதற்காகப் பட்ட கஷ்டங்கள் தான் அவர் சரித்திரத்தில் முக்கிய விஷயங்களா யிருக்கின் றன.

ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே திரு வெண்ணெய் நல்லூரில் சடையப்ப முதலியார் என்னும் பிரபு ஒருவர் மிகப் பிரசித்திபெற்று வாழ்ந்திருந்தார். அவ ராலேதான் கம்பர் முன்னுக்கு வந்தார். அந்த நன்றியறி தலை விளக்கும்பொருட்டுக் கம்பர் தாம் இயற்றிய இராமா யணத்தில் நூறு பாட்டுக்கு ஒரு பாட்டுவீதம் சடையப்ப முதலியாருடைய பெருமை தோன்றும்படியான பாடல் களைப் பாடியமைத்தார். இராம சரிதையில் நரஸ்துதி அவ் வளவு அதிகமாய் இருத்தல் கூடாதென்று சிலர் கூறிய தால், இப்பாட்டுக்களில் பல பின்னர் நீக்கப்பட்டன.

கம்பர் திருவழுந்தூர் என்னும் ஊரில் பிறந்தவர். இள மையிலேயே அவர் தந்தை இறந்துபோயினர். தாயார் பிள்ளையை வைத்துக்கொண்டு ஜீவிக்க வழியொன்று மில் லாமல், கூலிவேலை செய்தாவது பிழைக்கலாமென்று புறப் பட்டு, திருவெண்ணெய் நல்லூரில் மேற்கூறிய சடையப்ப முதலியாரை வந்து அடுத்துப் பிள்ளையைக் காப்பாற்றிவந்

தாள். அப்பொழுது கம்பரும் சடையப்பமுதலியார் வீட்டுப் பிள்ளைகளுக்குச் சுவடிக்கட்டுத் தூக்குகிறவராயிருந்து அவர்கள் பள்ளிக்குப் போகும்போது கூடச் சுவடிக்கட்டுகளைத் தூக்கிக்கொண்டு போவதும், திரும்பி வீட்டிற்கு வரும்போது தூக்கிக்கொண்டு வருவதுமாயிருந்தார். ஆரம்பத்தில் இவர்க்கு மற்றொரு வேலையும் கிடைக்காமல் தெய்வாதீனமாய்ச் சுவடி தூக்குகிற வேலை கிடைத்ததனாலேயே நாமகளது நல்லருள் இவரிடத்தில் பூரணமாயுண்டென்பது புலப்படுகின்றதல்லவா? பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் முதலியோரெல்லாம் கம்பருடைய நிலைமையைக் கேட்டு அவரிடத்தில் மிகவும் இரக்கமுற்றவர்களாய் அவருக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்துத் தங்களாலியன்றமட்டும் அவர்க்கு உதவி செய்துவந்தார்கள்.

## இவர் பண்டிதரானதும், கம்பரேன்று பெயர்பெற்றதும்

அவ்வாறிருக்கையில் கம்பருக்கு எழெட்டு வயதான பிறகு பாடசாலை உபாத்தியாயர் வைரபுரமென்னும் கிராமத்திலுள்ள தமது கம்பங்கொல்லை முதலியவற்றிற்குக் காவல் காத்திருக்கும்படி கம்பரை அவ்விடத்திற்கு அனுப்பினார். அவர் சொற்படியே, கம்பரும் தவறாமல் போய்க் காலைமுதல் காவல்காத்துக் கிளியோட்டிக்கொண்டிருந்தார். ஒருநாள் நடுப்பகலிலே நல்ல வெயில்வேளையில் அவர் சற்று இளைப்படைந்து அருகிலிருந்த காளி கோயிலிலே போய்க் கொஞ்சநேரம் படுத்தார். படுத்தவுடனே தினைக் கொல்லையில் குதிரை மேய்வதாகக் கனவுகண்டு, உடனே விழித்துக்கொண்டு ஓடிப்போய்ப் பார்த்தார். உண்மையாகவே ஒரு குதிரைவந்து கொல்லையில் மேய்ந்துகொண்டிருந்தது; தம்மாலானமட்டும் அதை அதட்டியோட்டிப் பார்த்

தார். என்ன ஓட்டியும் அது அசையவில்லை. அதுகண்டு கம்பர், 'ஐயோ, கொல்லைமுழுதும் கதிர்விட்டு மணிமுற்றியிருக்கிறதே; கதிரெல்லாம் அநியாயமாய்ப் போகிறதே; உபாத்தியாயர் கேட்டால் அடிப்பாரே; அவருக்கு என்ன சொல்லுகிறது' என்று அச்சங்கொண்டு ஒன்றுந் தோன்றாமல் கண்ணுங் கண்ணீருமாய் அழுதுகொண்டு நின்றார். அப்போது காளிதேவி அவரிடத்தில் திருவுள மிரங்கி அவருக்குப் பிரத்தியக்ஷமாகி, "பிள்ளாய், ஏன் புலம்புகிறாய்?" என்று கேட்டனள். "கொல்லையெல்லாம் குதிரை மேய்ந்துவிடுகிறது; எந்நேரம் ஓட்டினாலும் அது அவ்விடம் விட்டு அசையவில்லை; இதைக் கேட்டால் உபாத்தியாயர் என்ன செய்வாரோ என்று பயமாயிருக்கிறதே" என்றார் கம்பர். தேவியானவள், 'பயப்படாதே' என்று அவரைச் சமாதானப்படுத்தி, கவிச்சக்கரவர்த்தி யாகும்படியும், சொன்ன வாக்குச் சொன்ன வண்ணம் பலிக்கும்படியும் அனுக்கிரகித்து, "இப்பொழுது போய் ஓட்டினால் குதிரை ஓடிப் போகும்" என்று சொல்லி மறைந்துபோயினள். கம்பர் திரும்பித் தினைக்கொல்லையில் போய்ப் பார்த்தபோது குதிரை முன்போலவே மேய்ந்துகொண்டிருந்தது. அதைக் கண்டவுடனே நாமகள் கடாக்ஷத்தால்,

"வாய்த்த வயிரபுர மாகாளி யம்மே,கேள் :
காய்த்த தினைப்புனத்திற் காலைவைத்துச்—சாய்த்துக்
கதிரைமா ளத்தின்ற காளிங்க ராயன்
குதிரைமா ளக்கொண்டு போ"

என்னும் வெண்பாவொன்று அவர் வாயினின்றும் உதித்தது. தக்ஷணமே அந்தக் குதிரை கீழே விழுந்து இறந்து போயிற்று. அக் குதிரையோ அவ்வூர் அதிகாரியாகிய

காளிங்கராயன் என்பவனுடையது: நடந்த வரலாற்றைப் பார்த்திருந்த ஒருவர் உடனே அச் செய்தியை உபாத்தியாய ரிடம் சென்று அறிவிக்க, அவர் அக்கணமே ஓடிவந்து பார்த்துக் "குழந்தாய், இது ராயன்வீட்டுக் குதிரையாயிற் றே; ஏன் யோசியாமல் இப்படிப்பட்ட காரியம் செய்து விட்டாய்" என்று சொல்லிக் கலக்கமுற்றார். அதுகண்டு கம்பர் உடனே முன் பாடிய பாடலில் நான்காவது அடியை மாத்திரம் "குதிரைமீ ளக்கொண்டு வா" என்று மாற்றி, மற்றதை முன்போலவே வைத்து முழுதும் பாடினர். மாண்ட குதிரை உயிர்பெற்றெழுந்துஓடிப்போயிற்று. உபா த்தியாயர் கம்பர் திறமைக்கு வியந்து அவரை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போயினர்.

பிறகு இச்செய்தி காளிங்கராயனுக்குத் தெரியவர, அவன் அக்காலத்தரசனாகிய குலோத்துங்கன் என்னும் சோழராஜனுக்கு இவ்வதிசயங்களையெல்லாம் விவரமாய்த் தெரிவித்தான். அவற்றைச் சோழராஜன் கேட்டு, இத் தனை அற்புதச்செய்கையுள்ள சிறுவனைப் பார்க்க வேண்டு மென்று வரவழைத்தான். கம்பர் அரசனெதிரே போய் நின்றார். அவரைக் கண்ட அரசன் "நீர் எவ்விட மிருந்து வருகிறீர்?" என்று கேட்க, "திருவெண்ணெய் நல்லூர்" என்றார் கம்பர். அரசன் மறுபடியும், "அது எத்தன் மையது? யாருடைய ஆதீனத்திலிருப்பது?" என வினவ, கம்பர்,

"மோட்டெருமை வாவிபுக முட்டவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டம்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும்
உடையான் சடையன்ற னூர்"

என்று ஒரு பாடலைப் பாடினார். அதுகேட்டுக் குலோத்துங்கன் மிக்க மகிழ்ச்சிகொண்டு அவருக்கு விசேஷ சன்மான மளித்து அனுப்பினான். அது முதல் சடையப்பமுதலியாரும் கம்பரை விசேஷமாய் அபிமானித்து ஆதரித்து வந்தார். அப்பால் கம்பர் தம்மை முன் "பையா" என்று அழைத்தவர்க ளெல்லாரும் "ஐயா" என்று அழைக்கும்படி பெருமைபெற்றுப் பிரபல வித்துவானாயினார். இவர் சோழ ராஜன் முன்னிலையில் சென்றபொழுது கம்பும் கையுமாய்ப் போய் நிற்க, அவன் இந்தக் கம்பனே இத்தன்மையான செயல் செய்தானென்று வினவினனும். அதுகாரணமாகவே இவர்க்குக் கம்பரெனப் பெயர் அமைந்ததென்கிறார்கள். கம்பங்கொல்லை காத்ததனால் கம்பரெனப் பெயர் அமைந்த தென்றும் சொல்லுகிறார்கள். இது நிற்க.

கம்பர் சடையப்பமுதலியாரால் விவாகம் செய்விக்கப் பெற்று, *இராஜேந்திரன் குமாரனாகிய குலோத்துங்கச் சோழராஜனால் மிகவும் அதிகமாக நன்கு மதிக்கப்பெற்று அவனுடைய ஆஸ்தான வித்துவான்களுக்கெல்லாம் தலைவராகி, அரச சபைக்கு நாடோறும் சென்று, அங்குள்ள ஒட்டக்கூத்தர் முதலியோரும் அரசனும் வியக்கும்படி சாதுரியமாகவும் சமயோசிதமாகவும் பற்பல கவிகள்பாடிப் பிரசங்கித்துக்கொண்டிருந்தார்.

## கம்பர் இராமாயணம் பாடியது.

இவ்வா றிருக்கையில் சடையப்பமுதலியார் கம்பருடைய கவிபாடுந் திறத்தைக்கண்டு வியப்புற்று, இவர்

*கம்பரை ஆதரித்தவனும், ஒட்டக்கூத்தரை ஆசிரியராகக் கொண்டவனுமான குலோத்துங்கன் (இரண்டாவன்), விக்கிரமசோழன் மகன் என்று ஆராய்ச்சி வல்லார் கூறுகிறார்கள்.

ஸ்ரீராமபிரானுடைய புண்ணிய சரித்திரத்தைத் தமிழில் ஒரு காவியமாகப் பாடினால் உலகத்தார்க்கு மிகவும் உபகாரமாகுமெனத் தெரிந்து, ஒருநாள் கம்பரை நோக்கித் தமது கருத்தைத் தெரிவிக்க, அவரும் அப்படியே யாகட்டுமென்று அங்கீகரித்திருந்தார். ஆயினும், கம்பர் அதைப் பற்றித் துரிதப்படாமல் தாமதப்படுத்திக்கொண் டிருப்பது கண்டு, முதலியார் தம் கருத்தைச் சோழராஜனுக்குத் தெரிவித்தார். ராஜனும் இது நல்ல யோசனைதானெனத் தெரிந்து, இவரைமாத்திரம் தனியே பாடச்சொன்னால் காரியம் சீக்கிரத்தில் முடியாது; இருவரை ஏக காலத்தில் பாடும்படி சொன்னால் போட்டியின்மேல், சீக்கிரமாய்ப் பாடி முடிப்பார்களென்று கருதி கம்பர் ஒட்டக்கூத்தர் இருவரையும் வரவழைத்து, "நீங்கள் இருவரும் தனித் தனியே இராமாயணம் பாடிக்கொண்டு வாருங்கள்; உங்கள் திறமையைப் பார்ப்போம்" என்று கட்டளையிட்டான். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டு போய்விட்டார்கள்.

ஒட்டக்கூத்தர் அன்றைய தினமே பாடத் துவங்கி, பாலகாண்டமுதல் ஐந்துகாண்டம் முடித்து யுத்தகாண்டத்தில் கடல்காண்படலம் வரையில் பாடினார். அதுவரையில் கம்பர் தெய்வவணக்கங்கூடப் பாடவில்லை. அது தெரிந்து முதலியார் வேந்தனிடம் சென்று, "தாங்கள் கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் இராமாயணம் பாடச்சொன்னீர்களே? பின்பு அதைப்பற்றி விசாரியாதிருக்கலாமோ?" என்று சொல்ல, அரசன் உடனே அந்தக் கவிஞர் இருவரையும் வரவழைத்து, இராமசரித்திரம் எவ்வளவு பாடியாயிற் றென்று வினவினான். அதற்கு ஒட்டக்கூத்தர் உள்ளபடியே கடல்காண்படலம் வரையில் முடிந்த தென்றார். கம்பர் கலைமகள் கடாக்ஷம் பெற்றவராதலால், நாமிவர்க்கு இளைக்கலா

காதென்று கடல்காண்படலத்துக்கு அப்பாலுள்ள திரு வணைப்படலம் வரையி லாயிற்றென்றார். "ஆயின் அதை யெடுத்துக் கொஞ்சம் பிரசங்கம் செய்யும் கேட்போம்" என்றான் அரசன். கம்பர் உடனே சரஸ்வதியின் திருவரு ளால் அந்தப் படலத்தை மாத்திரம் எழுபது செய்யுட் களால் பாடிப் பிரசங்கம் செய்தார். அப்படலத்தில் திரு வணைகட்டுகிற சந்தர்ப்பத்தில்,

"குமுத னிட்ட குலவரை கூத்தரில்
திமித மிட்டுத் திரியுந் திரைகடல்
துமித மூர்புக வானவர் துள்ளினர்
அமுத மின்னு மெழுமெனு மாசையால்"

என்ற பாடல் வந்தது. 'குமுதனென்னும் வானரவீரன் கொண்டுவந்து அந்தரத்திலிருந்து போட்ட பெரியமலை வந்து வீழ்ந்து கூத்தாடி போலத் திமிதம் என்று ஒலித்துச் சுழல, அதனால் நுரைத்துத் திரைத்துக் குமிழியிட் டெழுந்த கடல்நீர்த் துளிகள் தங்கள் ஊராகிய சுவர்க்கத் தில் புக, அதை அங்குள்ள தேவர்கள் கண்டு, முன் ஒரு மலையையிட்டு அமுதமெழும்படி பாற்கடலைக் கடைந்தார் களே, இப்பொழுது பல மலைகளை இத் தென்கடலில் போ டுவதனால் இனி இதையும் கடைவார்கள்; முன்போலச் சொற்பமாகாமல் இதினின்றும் அமிதமாய் அமுதம் உண் டாகும்; வேண்டியமட்டும் பருகலா மென்ற ஆசையுடைய வர்களாய்த் துள்ளி யாடினார்கள்' என்று பொருள் கூறி அப்பாடலைப் பிரசங்கிக்கக் கேட்ட ஒட்டக்கூத்தர், "துளி யைத் துமி என்றீரே: அது எந்த நிகண்டிலுள்ளது? அல் லது அதற்கு எங்கேயாவது பிரயோகமுண்டோ?" என்று ஆக்ஷேபித்தார். கம்பர் இது 'உலகவழக்கு' என்றார். அப் போது ஒட்டக்கூத்தர், 'கொடிகற்றவன் இடறிவிழுந்தால்

அதுவும் ஒரு வரிசை' என்பது போல, இவர் வாய்தவறிச் சொன்னதை வழக்கென்று சாதிக்கிறாரெனத் தெரிந்து, "உலக வழக்கானால் அதை மெய்ப்பிக்கவேண்டும்" என்றார். நல்லது அப்படியே ஆகட்டுமென்று சொல்லிக் கம்பர் வீட்டிற்குப் போய்விட்டார். ஆயினும், அவர் கவலையற்றிருக்கவில்லை; இதற்கு நாம் என்ன செய்வது என்று தவித்துச் சரஸ்வதியைப் பிரார்த்தித்தார். அத் தேவி பிரசன்னமாகி, "இதற்காக விசாரப்படவேண்டாம்; நாளைக்காலையில் அவர்களை அழைத்துக்கொண்டு இடைத் தெருவுக்கு வா" என்று சொல்லி மறைந்தனள்.

அப்படியே மறுநாள் காலையில் கம்பர் ஒட்டக்கூத்தரையும் சோழராஜனையும் அழைத்துக்கொண்டு இடைத் தெருவுக்குப் போனார். அப்போது அங்கே தயிர் கடைந்து கொண்டிருந்த ஒருத்தி இவர்கள் காதில் கேட்கும்படி அருகே நின்ற சிறுவர்களை நோக்கி, "உங்கள் மேலே மோர்த்துமி தெறிக்கப்போகிறது, எட்ட இருங்கள்" என்றாள். கம்பர் ஒட்டக்கூத்தரைப் பார்த்துக் 'கேட்டீரா?' என்றார். உடனே சரிதானென்று அவர் ஒப்புக்கொண்டார். ஆயினும், பிறகு நிதானித்து, இது குடியில்லாத வீடென்று எனக்கு நன்றாய்த் தெரியுமே, இப்பொழுது இங்கே வந்திருப்பவர் யாரென்று விசாரிப்போம் என்று மறுபடியும் போய்ப் பார்க்க, அங்கே முன்போலவே யாருமில்லா திருக்கக் கண்டு, இது நாமகளது திருவிளையாட்டேயல்லது வேறல்லவென நிச்சயித்து ஒட்டக்கூத்தர் வியப்புடன் போய்விட்டார்.

பிறகு ஒட்டக்கூத்தர் இராமாயணத்தின் மற்றப் பாதியையும் பாடி முடித்தார். ஆயினும் அவர் மனதில் திருப்தியில்லை; கம்பருக்கு, சரஸ்வதி கடாக்ஷம் மிகுதியாயிருப்ப

தால் அவர் கவிக்கு முன் தமது பாடல் பெருமைப்படா தெனத் தெரிந்து வெறுப்புற்று, ஒருநாள் தாம் பாடிய இராமாயண புஸ்தகத்தை யெடுத்துக் கிழித்து எறியத் தலைப்பட்டார். அத் தருணத்தில் ஏதோ காரியமாய் அவ் விடம் சென்ற கம்பர் கூத்தர் செய்கிற காரிய மின்னதெனத் தெரிந்து, அதைத் தடுக்க விரும்பினர். அதற்குள் யுத்த காண்டம் வரையில் ஆறுகாண்டமும் கிழிபட்டுப் போயின. அதுகண்டு கம்பர் மிகவும் வருத்தப்பட்டு "ஐயோ! அரு மையாய்ப் பாடியதை இப்படி அநியாயமாய்க் கிழித்தெறிய லாமா? ஏழாவதான உத்தரகாண்டமாவது இப்படியே யிருக்கட்டும்; நான் பாடிய ஆறு காண்டங்களுடன் இது வும் சேர்ந்து இராமாயணம் பூரணமாகட்டும்'' என்று சொ ல்ல, அப்படியே யென்று ஒட்டக்கூத்தரும் அதற்குச் சம்ம தித்தார். உத்தரகாண்டத்தில் இராக்கதர்களுடைய பூர்வ சரித்திரமே மிகுதியாதலால் தாம் அதைப் பாடவேண்டி யது அவசியமன்றென்றும், அதுவுமிருந்தால் இரண்டு வாக்குக்குமுள்ள வேற்றுமை நன்முய் விளங்கும் என்றும் கம்பர் கருதினர்போலும். அதன் பிறகு கம்பர் தாம் ஏற் றுக்கொண்ட காரியம் நிர்விக்கினமாக நிறைவேறும் பொ ருட்டுச் சுந்தரகாண்டம் முதல் பாடத் தொடங்கிக் கிரம மாய் இராமாயணம் ஆறுகாண்டமும் நாளொன்றுக்கு எழு நூறு பாட்டு வீதம் ஸ்ரீராமபட்டாபிஷேகம் வரையில் பதி னுயிரம் பாடல்களாய்ப் பாடி முடித்தார். ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டத்துடன் இராமாயணம் பன்னீராயிரம் பாட லாகின்றது.

ஒருநாள் அரண்மனை நந்தவனத்தில் குலோத்துங்கச் சோழனும் கம்பரும் உல்லாசமாய் உலாவிக்கொண்டிருந்த னர். அப்போது சோழன் தன் மனத்துள் எதையோ நினைத்

துக்கொண்டு சிரித்தான். அதன் காரணம் அறிய விரும்பிய கம்பர் "மருமானே, ஏன் சிரிக்கிறீர்?" என்று கேட்டார். அதற்கு விடையாக அரசன் "அம்மானே, இந்த இராச்சியமும் இதில் உள்ள பிரஜைகளும் நமக்கு ஐக்கியமல்லவா என்றெண்ணினேன், சிரிப்பு வந்தது" என்றான்.

"ஆம், ஆம்; எல்லாம் உமக்கு ஐக்கியம் என்பதற்கும், நீர் நமக்கு ஐக்கியம் என்பதற்கும் என்ன தடை?" என்று கூறிக் கம்பர் தாமும் சிரித்தார்.

கம்பர் வார்த்தைகள் அரசன் மனத்தைப் புண்படுத்தி விட்டன. 'இவர் என்ன நம்மைப்போல மண்டலாதிபதியா? நாம் கொடுப்பதை வாங்கிச் சீவனம் பண்ணுகிற வித்துவான் தானே! கொஞ்சங்கூட நம்மை மதியாமல் பேசினாரே! நாமா இவருக்கு ஐக்கியம்! இந்த விதம் வேறொருவன் சொல்லியிருந்தால் அவனை அக்கணமே சிரச்சேதம் செய்துவிட மாட்டோமா!' என்று தனக்குள் எண்ணி அதற்குமேல் கம்பரோடு ஒன்றும் பேசாது முகவாட்டத்துடன் அரண்மனைக்குப் போய்விட்டான்.

அப்பால் அரசன் ஏதோ ஒரு காரணத்தை வைத்துக் கம்பரைக் கோபித்து, "இன்று முதல் நீர் என் தேசத்தில் இருக்கவேண்டாம், வேறெங்காவது போய்விடும்" என்று கூறினான்.

கம்பர் அதற்கிசைந்து மன்னனை நோக்கி,

"சாதமிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ?-மேதினியில்
சொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா! நீ முனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம்?"

" அன்றையிலும் ஞாலம் அகன்றதோ அல்லவென்று
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டனையோ?—"

"மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ?
உன்னையறிந் தோ தமிழை ஓதினேன்? - என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு ?"

எனவும், "இக்கணமே யாம் உன் நாட்டைவிட்டுச் செல்கிறோம். இனி ஒரு கால் உன்னிடம் வர நேருமானால், உன்னைப் போலவே ஓர் அரசன் நமக்கு அடைப்பக்காரனாகத் தாம்பூலம் மடித்துக் கொடுக்கத்தக்க அந்தஸ்துடன் வருவோம்" எனவும் கூறிச் சோழன் அரண்மனையை விட்டு, அவன் நாட்டையும் விட்டு, அகன்று சென்றார்.

அப்பால், கம்பர் சேரனை அடைந்து அவன் அன்புக்கும் ஆதரவுக்கும் ஆளாயிருந்தார். அவ்வரசன் இவரிடத்தில் அபிமானம் மிக்குடையனாயிருப்பது கண்ட மற்றப் புலவர்கள், பொறாமை வசப்பட்டு, இவருக்குத் தீங்கும் மானக்கேடும் உண்டாக்க முயன்றார்கள். ஆனால் அவர்கள் முயற்சி பயன்படவில்லை ; தாங்கள் அவர்க்குத் தீங்கும் அவமானமும் செய்வதுபோகத் தங்களுக்குத்தாங்களே தீங்கும் அவமானமும் தேடிக்கொண்டார்கள். இவர்களால் அவமானமுற இருந்த கம்பர் சேரமன்னனால் முன்னையினும் அதிகமாகப் பாராட்டப்படலாயினர்.

தம்மை அன்பாகவும் கௌரவமாகவும் ஆதரித்து வரும் சேரனிடம், கம்பர் தாம் சோழமன்னனிடம் கோபித்து வர நேரிட்ட வரலாற்றையெல்லாம் கூறினர். சேரன் அவைகளைக் கேட்டபிறகு கம்பர்பால் இன்னும் அதிக மதிப்பும் வாஞ்சையும் கொண்டு, அவரைத் தன் இருகண்ணில் ஒரு கண்ணாகப் பாவித்து பரிபாலித்து வந்தான். இவ்வாறு பல நாட்கள் சென்றன.

சோழ மன்னனோ கம்பரை விட்டுப் பிரிந்த நாள்

முதல் தாயை விட்டுப் பிரிந்த கன்றுபோல் வருந்தித் தவித்துப் பலவிடங்களிலும் தூதர்களையனுப்பி அவரைத் தேடத் தொடங்கினுன். நெடுநாள் வரையில் அவர் இருக்குமிடம் தெரியவில்லை. கடைசியில் சேரராஜனிடத்தி லிருக்கிருரென்று எப்படியோ அறிந்துகொண்டு, தயைசெய்து தன் குற்றத்தைப் பொறுத்துக்கொண்டு உடனே தன்னிடம் வரவேண்டுமென்று கம்பருக்கு ஒரு கடிதமும்; தடையின்றி அவரை அனுப்பும்படி அரசனுக்கு ஒரு கடிதமும், எழுதியனுப்பினுன். சோழன் நிருபத்தைக் கண்ட கம்பர் சோழனிடம் போவதற்கு இது தான் தருணமென்று அச்செய்தியைச் சேரனுக்கு அறிவிக்க, அவன் அவரை விட்டுப் பிரிய மனமில்லாமல் வருந்தினுன். கம்பர் அதற் கேற்றபடி பலவிதமாய் உபசாரவார்த்தைகள் சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு அவன் கொடுத்த பலவிதமான பரிசுகளுடனே, யானை குதிரை முதலியவைகளும் பலவிதமான பரிஜனங்களும் புடைசூழ, அங்கிருந்து புறப்பட்டார். ராஜன் சிறிதுதூரம் வழி கொண்டுவிட்டுத் திரும்புகையில் கம்பரை நோக்கி, "நீர் சோழராஜனிடத்திற் செய்த பிரதிக்கினையை மறந்தீர் போலும்" என்ன, கம்பர், "இல்லை, அவ்விடம் சேர்ந்தபின் சமயம் பார்த்து ஒரு விண்ணப்பம் எழுதுகிறேன்; கணப்பொழுது வந்திருந்து என்னைப் பெருமைப் படுத்தவேண்டும்" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு போயினுர்.

கம்பர் சோழன் நகரை அடைந்ததும் அரசன் அவரை நல்வரவேற்று அவர்க்குச் செய்த உபசாரங்களை இங்கு எடுத்துரைக்கவேண்டுமோ? அவரைக் கண்டபோது அவ்வரசன் மேகத்தைக்கண்ட மயில்போலக் களித்து, அன்று தொட்டு அவரை முன்னினும் பதின்மடங்கு அதிகமாகப்

பெருமைப்படுத்தலானன். கம்பர் தாம் செய்த பிரதிக்கினையை நிறைவேற்றிய புதுமையைக் கடைசியாகக் கூறி முடிப்போம்.

சோழராஜன் ஒரு சமயத்தில் கம்பரோடுகூடிக் கோலாகலமாய்ப் பேசிக்கொண்டிருந்தபோது அவரை நோக்கி, "முன் நீர் செய்த பிரதிக்கினை என்னவாயிற்று?" என்ருன். கம்பர் "அது இன்னும் எட்டுத் தினத்தில் தெரியவரும்" என்று கூறி, உடனே சேரனுக்குத் திருமுகம் போக்கினர். அத் திருமுகத்தைக்கண்ட தக்ஷணமே அவ்வரசன் புறப்பட்டு மாறுவேஷம் பூண்டுவந்து, கம்பர் சோழன் சபையிலுட்கார்ந்திருக்கும்போது அண்டையிலிருந்து அவருக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுத்தான். அந்தக் குறிப்பைச் சோழன் மகள் கண்டறிந்து தன் தந்தைக்குத் தெரிவித்தாள். அதை அறிந்துகொண்டு கம்பர் உடனே சேரனுக்குச் சமிக்கை காட்டி அவனை அனுப்பிவிட்டார். ஆ! அவருடைய லௌகிக தந்திரங்களைப் பாருங்கள்! சேரராஜன் அடைப்பைக்காரனுக வந்து தமக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தாலும் தாம் அதைப் போட்டுக்கொள்வது மரியாதையல்லவென்று அவர் அவைகளை அப்படியே கையில் அடுக்கிவைத்துக்கொண்டிருந்தார். இவைகளை யெல்லாம் பார்க்கச் சோழராஜனுக்கு அவரிடத்தில் அளவில்லாத சந்தோஷமும் கௌரவமு முண்டாயின. அதனல் அவன் அவருடைய பேரும் புகழும் இன்னும் அதிகமாய் உலகமெங்கும் பரவும்படி செய்துகொண்டு அவரைப் பலவிதமாகப் பெருமைப்படுத்தி வந்தான்.

கம்பர் கவிபாடுவதில் கற்பனசக்தியுடையவர். பௌதிகப் பொருள்களை வருணிப்பதிலும் இயற்கைத் தன்மையை எடுத்துக் காட்டுவதிலும் சுயசக்தி மிகுந்தவர்.

இதுபற்றியே 'கல்வியிற் பெரியர் கம்பர்' என்னும் பழமொழி தமிழ்நாட்டில் இன்னும் வழங்கிவருகின்றது. இவர் தென்னாட்டிற் சென்றபோது பாட்டுப்பாடி ஏற்றம் இறைத்துக்கொண்டிருந்த தோட்டக்காரன் ஒருவன் ஏற்றம் இறைப்பதை நிறுத்தும் சமயமாயிருந்தது. "மூங்கிலிலை மேலே" என்று பாட்டை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான். கம்பர் இப்பாட்டின் தொடர்ச்சியை யறியும்பொருட்டு மறுநாள் ஏற்றம் இறைப்பவன் வந்து ஏற்றத்தின்மேலேறுவதற்கு முன்னே அங்குபோ யிருந்து "மூங்கி லிலை மேலே தூங்கும் பனி நீரே" என்று அவன் விட்டவிடத்திலிருந்து தொட்டுப் பாடியதைக் கேட்டு, அதில் உள்ள நயத்தை முற்றும் உணர்ந்து உவந்தா ரென்பது நாட்டிற் கர்ண பரம்பரையாய் வழங்கிவரும் ஒரு விருத்தாந்தம்.

கம்பர் தாம் பாடிய இராமாயணத்தை அரங்கநகரில் சாலிவாகனசகம் ൮07-ல் நாதமுனிகள் காலத்தில் அரங்கேற்றினார். நாத முனிகள் வைணவர்களில் முக்கியமான ஆசாரியர். வைணவர்கள் கம்பரை நாலா திக்குகளிலும் போய் இராமாயணத்தின் சீரைப்பற்றிப் புலவர்களிடம் சாத்து கவிகள் வாங்கி வரும்படி பலதரம் அலைக்கழித்தபோது கம்பர் ஆழ்வார்கள் விஷயமாய் அபசார வார்த்தைகளைச் சொல்லித் தம்மைப் புகழ்ந்துகொண்டமைக்காக நாதமுனிகள் கம்பரை மண்டபகைங்கரியம் செய்யச் சொல்லி அவ்வபராதத்தை க்ஷமித்தருளினார். அரங்கன் சந்நிதியில் கம்பருக்குத் தீர்த்தம் பிரசாதம் கொடுப்பித்தபோது அர்ச்சகன் மூலமாக ஆவேசம் உண்டாகி "நீ நம் சடகோபனைப் பாடினையோ?" என்று அரங்க நகரப்பன் வினவவே, கம்பர் உடனே அவ்விடத்திலேயே சடகோபரைச் சிறப்பித்து ஒரு கலித்துறை யந்தாதியை நவரசம் பொலியப் பாடினார்.

கம்பநாட்டாழ்வான் என்னும் பெயரும் கம்பருக்குச் சூட்டப்பட்டது. உடனே தீர்த்தப்பிரசாதங்கள் கொடுக்கப்பட்டன. கம்பர் பாடிய மூன்று பாடல்கள் நாலாயிரப் பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

அம்பிகாபதி யென்பவன் கம்பர் மகன். இவனும் சிறந்த கல்விமான். இவன் கோவையென்னும் பிரபந்தம் ஒன்று பாடியுள்ளான். அதற்கு 'அம்பிகாபதி கோவை' என்று பெயர் வழங்கி வருகிறது. இதனை இயற்றியவன் அம்பிகாபதியல்லன் என்பர் பண்டிதர் பலர்.

கம்பர் பாடியவைகளில் இராமாயணந்தான் பார காவியம். இதில் அவருடைய சுயமாகிய கற்பனுவல்லபம் ஒப்புயர்வின்றி விளங்குகின்றது. கம்பர் கவிநயங்களைப் பாராட்டாதவர் தமிழ்நாட்டில் யாருமில்லை. நாமகளந்தாதி, கமலையந்தாதி, திருக்கை வழக்கம் முதலிய சிறு பிரபந்தங்களும் இவர் பாடியுள்ளார். வடமொழியிற் காளிதாசன் சுயமாகிய கற்பனுசக்தியில் விளங்குதல்போலக் கம்பரும் தமிழிற் காளிதாசனுகவே விளங்குகின்றார். இவ்விருவர்களும் காளி தாச ரானபிறகுதான் தம் வல்லமையை உலகோர் கண்டானந்திக்க நவரசபுஞ்சமாய்க் கவிமாரியைக் காளமேகம்போற் பெய்ய வல்லராயினர் என்பர். தமிழ்நாட்டு மூவேந்தரும் புவிராசர்களும் கவிராசர்களும் மெச்சிமகிழும்படி இராமாயணம்பாடிய கம்பர் அதில் தமது அபூர்வமான கற்பனுசத்தியைக் காட்டியிருப்பதுடன் பற்பல நீதி நெறிகளையும் கூறியுள்ளார்.

எடுத்த இடமெல்லாம் இனிக்கும் இவருடைய இராமாயணத்தில் சில செய்யுட்கள் எடுத்துக் கீழே காட்டப்பட்டிருக்கின்றன :

பாலகாண்டம் :

### வெள்ளத்துக்குவமை

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைக ளாலும் இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையின் ஒன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே.

### தாடகைவதை

சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தி னாள்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சிற் றங்கா தப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்றே.

### அகலிகை சாபவிமோசனம் பெற்ற போது விசுவாமித்திரர் கூறியது

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனியிந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவ துண்டோ!
மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ணம் அங்கு கண்டேன் கால்வண்ணம் இங்கு கண்டேன்.

### இராமனையும், சீதையையும், இலட்சுமணனையும் குறித்து மிதிலைவாசிகள் கூறுதல்

நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும் ;
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கு மன்ன தேயாம்;
தம்பியைக் காண்மின் என்பார் தவமுடைத் துலக மென்பார் ;
இம்பரிந் நகரிற் றந்த முனிவனை இறைஞ்சு மென்பார்.

### இராமனைக் கண்டவர்கள் நிலை

தோள்கண்டார் தோளே கண்டார்; தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்; தடக்கைகண் டாரு மஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத் தன்னான் உருவுகண் டாரை யொத்தார்.

தசரதர் முதலியோர் இரதமேறி மிதிலைக்குச் செல்லல்

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே;
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையுந் தன்னிற மாக்கிய விரதம்.

அயோத்தியா காண்டம் :

மந்திரிகள் தன்மை

உற்றது கொண்டு மேல்வந் துறுபொருள் உணருங் கோளார்;
மற்றது வினையின் வந்த தாயினும் மாற்ற லாற்றும்
பெற்றியர்; பிறப்பின் மேன்மைப் பெரியவர்; அரிய நூலும்
கற்றவர்; மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்.

தசரதர் இராமரைக் கானனுப்ப மாட்டாமற் புலம்பல்

'கண்ணும் நீராய் உயிரும் ஒழுகக் கழியா நின்றேன்
எண்ணும் நீர்நான் மறையோ ரெரிமுன் னின்பேற் சொரிய
மண்ணும் நீராய் வந்த புனலை மகனே! வினையேற்(கு)
உண்ணும் நீராய் உதவி உயர்கான் அடைவாய்' என்றான்.

இராமர் இலட்சுமணருக்குக் கூறுதல்

'நீருள வெனினுள மீனும் நீலமும்;
பாருள வெனினுள; யாவும் பார்ப்புறின்
நாருள தனுவுளாய் நானுஞ் சீதையும்
ஆருள ரெனினுளம் அருளுவாய்' என்றான்.

குகன் பரத சத்துருக்னர்களைக் கண்டு கருதல்.

'நம்பியுமென் நாயகனை ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்; தவவேடம் தலைநின்றான்;
துன்பமொரு முடிவில்லைத்; திசைநோக்கித் தொழுகின்றான்:
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்' பென்றான்.

**குகனுக்குக் கோசலையைப் பற்றிப் பரதன் கூறல்.**

சுற்றத்தார் தேவரோடும் தொழநின்ற கோசலையைத்
 தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவர் ஆரென்று குகன்வினவ
 'வேந்தர் வைகும்
முற்றத்தான் முதற்றேவி; மூன்றுலகும் ஈன்றானை
 முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறத்த லாற்றுறந்த
 பெரியாள்' என்றான்.

ஆரணிய காண்டம்:

**விராதன் துதி.**

வேதங்க ளறைகின்ற உலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்க ளிவையென்னிற் படிவங்கள் எப்படியோ !
ஓதங்கொள் கடலன்றி ஒன்றினோ டொன்றொவ்வாப்
பூதங்கள் தொறுமுறைந்தால் அவையுன்னைப் பொறுக்குமோ!

**சூர்ப்பநகை இராவணனுக்குச் சீதை நலங்கூறல்.**

பாகத்தி லொருவன் வைத்தான்; பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்; அந்தணன் நாவில் வைத்தான்;
மேகத்தின் மின்னை முன்னே வென்றநுண் ணிடையை நீயும்
மாகத்தோள் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி ?

கிட்கிந்தா காண்டம்:

**வாலி தன்மீது இராமர் அம்பெய்தது அறிந்து கூறல்.**

கோவியற் றருமம் உங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்,
ஓவியத் தெழுத வொண்ணா உருவத்தாய், உடைமை யன்றோ?
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை !
அரக்கரோர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ ?
இரக்கமெங் குகுத்தாய் ? என்பால் எப்பிழை கண்டா யப்பா ?
பரக்கழி யிதுநீ பூண்டால் புகழையார் பரிக்கற் பாலார் ?

சுந்தர காண்டம்:

சீதை அனுமனைக் கண்டு கருதல்.

அரக்கனே யாக; வேறோர் அமரனே யாக; அன்றிக்
குரக்கினத் தலைவ னேதான் ஆகுக; கொடுமை யாக;
இரக்கமே யாக; வந்திங் செம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வை; தந்தான் உயிர்: இதின் உதவி யுண்டோ?

யுத்த காண்டம்:

இராமர் பட்டாபிஷேகம்.

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடைக விக்க இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க வெண்ணெயூர்ச் சடையான் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

---

# புகழேந்திப் புலவர்

புகழேந்திப் புலவர் பாண்டிநாட்டில் வேளாளர் குலத்தில் பிறந்து தமிழ்க்கல்வியில் தேர்ந்து புலவர்களுக்குத் திலகம் போன்றவராய் இருந்தும் அவருடைய வரலாறு குறைதீர விளங்கவில்லை. வெண்பா என்னும் செய்யுளியற்றுவதில் பேர்பெற்றவரா யிருந்தனர் என்று இவரை வரகுணபாண்டியன் தன் சமஸ்தான வித்துவானுயிருக்கும்படி வேண்டிக் கொள்ள, அவ்வாறே யிருந்து அரசன் சபைக்கு வருகின்ற புலவர்களெல்லாருக்கும் இதமே செய்துகொண்டிருந்தனர் என்பது மாத்திரம் ஐயமின்றித் தெரியவருகிறது.

இவர் சமஸ்தான வித்துவானு யிருந்தபொழுது வரகுணபாண்டியனுக்கு ஒரு மகள் பிறந்தனள். அம் மகளுக்

குப் புகழேந்திப்புலவரால் கல்விப் பயிற்சி செய்வித்துச் சோழநாட்டரசனாகிய குலோத்துங்கச்சோழனை விவாகஞ் செய்வித்துப் பல சீதனப்பொருள்களோடு புகழேந்திப் புலவரையுங் கொடுத்தனன். அது முதல் புலவர் குலோத்துங்கச் சோழனது இராஜதானியாகிய உறையூரில் வசிக்கலாயினர். அங்கே வசிக்கும் காலத்தில் ஒரு நாள் அரசனது பட்டத்தியானை கால்சங்கிலியை அறுத்துக்கொண்டு நிற்க, அது காரணமாக, அந்தச் சமஸ்தானத்து வித்துவானாகிய ஒட்டக்கூத்தப் புலவர் சோழனை உயர்த்திப் பாண்டியனைத் தாழ்த்தி ஒரு செய்யுட் கூறினர். அது வருமாறு:

"இன்னங் கலிங்கத் திகல்வேந்தர் உண்டென்றோ,
தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ?—சென்னி
அகளங்கா, உன்றன் அயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட வினைவு."

இச் செய்யுளைக் கேட்டலும் புகழேந்திப்புலவர்,

"தென்னவன் தென்னர் பெருமான் திருமதுரை
மன்னவன் கோக்களிற்றின் வல்லிச்சும்—பொன்னிநா
டாலிக்கும் வேந்தாம் அபய குலன்மகளிர்
தாலிக்கும் ஒன்றே தளை."

என்று பாண்டியனை உயர்த்திச் சோழனைத் தாழ்த்தி இச் செய்யுளைச் சொல்லினர். அதுமுதல் ஒட்டக்கூத்தப் புலவர் புகழேந்திப் புலவரிடத்துப் பொறாமைகொண்டனர்.

பின்பு புகழேந்திப்புலவர் சோணாட்டையடுத்த மள்ளுவநாட்டு முரணை நகரத்திற் சிற்றரசனாயிருந்த சந்திரன் சுவர்க்கி என்னும் அரசன் வேண்டுகோளால் நளச்சக்கரவர்த்தியின் சரிதத்தை வெண்பாக்களினால் பாடி நளவெண்பா எனப் பெயரிட்டனர். அந்நூலை அரங்கேற்றும் பொழுது, ஒட்டக்கூத்தப் புலவரும் வந்து கேட்டுக்கொண்

டிருக்கப், புகழேந்திப்புலவர் அந்நூலில் மாலைக்கால வருணனையாகிய,

> "மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
> வில்லி கணைதெரிந்து மெய்காப்ப-முல்லைமலர்
> மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
> புன்மாலை யந்திப் பொழுது."

என்ற செய்யுளைப் பிரசங்கிக்க, ஒட்டக்கூத்தப்புலவர் தாம் கொண்ட அழுக்காற்றின் மிகையால், தேனை ஒழுகவிட்டு அழுக்கைப் பற்றிக்கொள்ளும் பன்னுடையைப் போல், குணத்தைக் கொள்ளாது குற்சிதமாய் "மல்லிகையைச் சங்காகச் சொல்லியது பொருந்தும். வண்டை ஊதுபவனைச் சொல்லியது ஒவ்வாது. சங்கையூதுபவன் அடியை வாயில் வைத்தூதல் முறையே யன்றி நுனியை வைத்தூதல் வழக்கன்று" எனத் தர்வாதஞ் செய்தனர். அதற்குப் புகழேந்திப் புலவர் "கட்குடியனுக்கு அடியென்றும் நுனியென்றும் வேறுபாடு தெரியாது" என்று விநயமாயும் சமயோசிதமாயும் விடைபகர்ந்தனர். அது கேட்டு அச்சபையோர் புகழேந்திப் புலவரை வியந்து, அவரை அவமதிக்கவந்த ஒட்டக்கூத்தப்புலவர் தாமே அவமதிப்புற்றனரென நகைத்தனர். பின்பு புகழேந்திப்புலவர் அந்நூல் முழுவதையும் புலவர் யாவரும் மனமகிழ அரங்கேற்றி முடித்தனர்.

அதனுல் ஒட்டக்கூத்தப்புலவர் புகழேந்திப் புலவரிடத்து முன்னிலும் மிக்க பொருமையுற்றுப் பகைமை கொண்டு எவ்விதத்திலாயினும் இப் புகழேந்தியைச் சிறையில் வைத்து அவமதிப்புச் செய்யவேண்டுமென் றெண்ணங் கொண்டிருந்தனர்.

அப்படி யிருக்கும்பொழுது ஒரு தினத்தில் பொய்மையாய் ஒரு குற்றத்தைப் புகழேந்திப் புலவர் செய்ததாகக்

கற்பித்து அரசனிடஞ் சொல்ல, அரசன் அதனைத் தீர்க்கமாய் விசாரியாது ஒட்டக்கூத்தப் புலவரிடத்துள்ள அபிமானத்தால் புகழேந்திப் புலவரைச் சிறையில் அடைவித்தனன்.*

புகழேந்திப்புலவர், சிறைச்சாலையில் உணவின்றி வருந்த நேர்ந்தது. அவர் இதுவும் ஊழ்வலி என்றோர்ந்து மனம் அமைந்திருந்தனர். அப்போது புலவர் பாரதக்கதையிற் சில பகுதிகளை, பவளக் கோடிமாலை முதலிய சில நூல்களாக எளியநடையில் இயற்றிப் பாடிக்கொண்டிருந்தனர். அந்த நூல்களே இப்பொழுது 'நங்கைப் பாட்டுகள்' என வழங்கி வருகின்றன. அவற்றைச் சாலையின் பக்கவழியாய்த் தண்ணீர்க்குச் செல்லும் மாதர்கள் கேட்டுச் சாளரத்தின் வழியாய்ப் பார்த்துப் புலவர்பால் பரிதாபமுற்று அரிசி காய் முதலிய உணவுப்பொருள்களைக் கொடுக்க அவற்றைப் புகழேந்திப் புலவர் சாளரத்தின் வழியாய் வாங்கிச் சமைத்துண்டிருந்தனர்.

அவ்வாறிருக்குங் காலத்தில் ஒரு நாள் இரவில் குலோத்துங்கச் சோழன், வருடத்தில் ஒருமுறை ஒட்டக்கூத்தப் புலவரோடு யானைமேலேறி குடைபிடித்துக் கொண்டு ஊர்வலம் வரும் வழக்கத்தின்படி, வீதியில் உலா வந்தான். அதைச் சிறைச்சாலையிலிருந்த புகழேந்திப் புலவர் சாளரத்தின் வழியால் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது அப் பவனியைக் கண்ட பலரும் "அற்பர்

---

* இவ் வரலாறு "சோழன் பாண்டியன் மகளை விவாகஞ் செய்துகொண்டு மதுரையிலிருந்தபோது, சோழன் அரண்மனைக்கு முன்னதாக அனுப்பப்பட்ட சீதனப்பொருள்களோடு வந்த புகழேந்திப் புலவரை, ராஜப்பிரதிநிதியாக அச்சமயம் இருந்த ஒட்டக்கூத்தர் சிறையிட்டுவிட்டார்" என வேறுவகையாகவும் வழங்குகிறது.

அர்த்தராத்திரியில் குடைநிழலிற் செல்வர்'' என்னும் பழமொழியைச் சொல்லி அரசனையும் ஒட்டக்கூத்தரையும் பற்றித் தமக்குள் ஏளனமாகப் பேசினர். அது தன் செவிக் கெட்டவே, அரசன் ஒட்டக்கூத்தப் புலவரை நோக்கி, "இரவில் குடை நிழலிற் செல்லல் தேவருக் கன்றி நமக்குத் தகுமா?'' என்று கேட்க, அதற்கு அவர் விடை யொன்றும் சொல்லவில்லை.

அப்போது அருகில் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த புகழேந்திப் புலவர் அரசனை நோக்கி,

" அண்டமீ துலவி வாழும் அருந்ததிக் கற்பா ளுன்னைக்
கண்டதா லுவகை யெய்திக் கற்பழிந் திடுவ ளென்றே
எண்டிசை புரக்கும் வேந்தே இரவினிற் கவிகை நீழல
கொண்டுமா நடாத்து மாறு குலோத்துங்கா நீதி தானே''

என்ற செய்யுளைச் சொல்லினர். அதைக் கேட்ட குலோத்துங்கச் சோழன் "நமது கேள்விக்கு இவ்வளவு சமத்காரமாய் விடையளித்த கவிஞர் யார்?'' என் அதிசயித்துச் சாளரத்தின் வழியால் பார்த்துப் புகழேந்திப் புலவரெனத் தெரிந்து உடனே அவரைச் சிறைநீக்கி வரவழைத்து யானையின்மேல் ஒட்டக்கூத்தப்புலவரோடு சேர்த்து வைத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றனன்.

நிகழ்ந்தவற்றை யெல்லாம் அரசன் மனைவியாகிய பாண்டியன் மகள் கேள்வியுற்றுத் தன் குருவாகிய புகழேந்திப் புலவரைச் சிறையிலடைத்திருந்ததை நினைத்து மிகவருந்தி நாயகனது நீதி வழுவால் இப்பிழை நேர்ந்ததென் றெண்ணிக் கோபங்கொண்டு, தன் அரண்மனை வாயிற்கதவைச் சார்த்தி ஒரு தாளிட்டுக் கொண்டிருந்தனள். அரசன், புகழேந்திப் புலவரை அநீதியாய்ச் சிறையிலடைத்தமையைக்

கருதி மனம் நொந்து அவ்விருபுலவரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு தன் மனைவியின் அந்தப்புர வாயிலுக்குச் சென்றான். அந்தப்புரக் கதவு சார்த்தி யிருப்பதைக் கண்டு மனைவி மிக்க கோபத்தால் கதவடைத்துக் கொண்டிருக்கின்றாளெனத் தெரிந்து, ஒட்டக்கூத்தப் புலவரை நோக்கி அவள் கோபந்தணிந்து கதவைத் திறக்குமாறு ஒரு செய்யுள் பாடும்படிச் சொல்ல, ஒட்டக்கூத்தப்புலவர்,

"இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்துவளைக்
குழையொன் றிரண்டு விழியணங்கே, கொண்ட கோபந்தணி:
மழையொன் றிரண்டுகை மானு பரணனின் வாயில்வந்தாற்
பிழையொன் றிரண்டு பொறுப்பதன் றோகடன் பேதையர்க்கே."

என்ற செய்யுளைச் சொல்லலும், பாண்டியன் மகள் அச்செய்யுளைக் கேட்டுக் கதவைத் திறவாது உள்ளிருந்தே "கூத்தரே, உமது இனத்தார்* தொழில்முறைக்குத் தக்கபடி 'இழை' என்றெடுத்துக்கொண்டீர் போலும். மனம் வருந்தி அழுதுகொண்டிருக்கும் என் கண்களைக் 'குழையொன் றிரண்டு விழி' என்று சொல்லியது சமயோசிதமோ? அடுத்து 'கோபந்தணி' என்றதும் அருவருப்பானதன்றோ? 'மழைக் கையும் மானமு முள்ளான்' என்றது இவ்வரசனை மட்டுங் குறிக்குமோ? 'பேதையர்க்கு' என்றது தகுதியோ?" என்று மிகச் சினந்து 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாள்' என்று கூறிப் படக்கென இரண்டாவது தாளுமிட்டனள். அது கண்ட அரசன் புகழேந்திப்புலவரை நோக்கி நீர் ஒரு செய்யுள் சொல்லுமினென வேண்டப் புகழேந்திப்புலவர்,

"நானே யினியுன்னை வேண்டுவ தில்லை; நளினமலர்த்
தேனே, கபாடந் திறந்திடு வாய்: திற வாவிடிலோ

---

* கூத்தர் செங்குந்தர் மரபினராதலால் அவர் இனத்தார் தொழில் நெசவுத் தொழில் என்பதறிக.

வானே றனைய இரவி குலாதிபன் வாயில் வந்தால்
தானே திறக்குமின் கைத்தல மாகிய தாமரையே.''

என்ற செய்யுளைப் பாடினர். உடனே, பாண்டியன் மகள் கதவைத் திறந்துவிட்டுத் தன்னாசிரியராகிய புகழேந்திப் புலவரை வணங்கினள். புகழேந்திப்புலவர் தமது ராஜகுமாரியை ஆசீர்வதித்துச் சோழன் அனுமதிபெற்றுத் தம் வீடு திக்குச் சென்றனர். பின்னர் ஒட்டக்கூத்தப் புலவரும் மனம் நொந்து வீட்டிற்குச் சென்றிருந்தனர்.

அப்பால் அரசனும் அவன் மனைவியும் உள்ளங்கலந்து புகழேந்திப் புலவர் சிறைப்படும்படி நேர்ந்தமையைக் குறித்து வருந்தினர். ஆனால், ஒட்டக்கூத்தப் புலவர் புரட்டினாலேயே அது நேர்ந்ததென்று தெரிந்திருந்தும், அவரையும் ஒரு புலவரென மதித்தனரா யிருந்தனர்.

அப்பால் ஒரு நாள் அவ்வூரிலிருந்த வாணியப் பெண் ஒருத்தி அப்புலவர் இருவருள் புகழேந்தியை மதித்துப் புகழ்ந்து, ஒட்டக் கூத்தப் புலவரை இகழ்ந்தனள். அதனை ஒட்டக்கூத்தப் புலவர் அரசனிடம் சொல்ல, அரசன் அப் பெண்ணை அழைப்பித்து வினவினன். அவள் அரசனை நோக்கி "உனது குடைக்குள் அடங்காதவை இவ்வுலகத்தில் இரண்டுள்ளன. அவைகள் இன்னவையென்று எவர் சொல்லுகிறாரோ, அவரே இப்புலவரிருவருள் உயர்ந்தவர் எனத் தெரிந்து கொள்க. நான் உணர்ந்திருக்கிறேன்'' என்றனள். உடனே அரசன், அவ்விருபுலவரையும் அழைப்பித்து அவர்களை நோக்கி அப் பெண் சொல்லிய இரண்டையும் இன்னவையெனச் சொல்வீரென, ஒட்டக்கூத்தப் புலவர் ஒன்றுந் தோன்றாது சும்மா இருந்தனர்; புகழேந்திப் புலவர் "அரசே! மேருமலையின் சுற்றிடமுழுதும் விரிந்து

கவிந்து நிழல் செய்யும் நினது குடைக்குள், உலகம் முழுவதும் பரந்து விரிந்த நினது கீர்த்தியும் உன் புயங்களை விரும்பும் மாதர் விரகமும் அடங்காதனவாம்'' என்னும் பொருளுள்ள செய்யுளைச் சொல்லினர். அது கேட்டு அச்சபையிலுள்ள புலவர் யாவரும் அரசனும் மகிழ்வுற்றனர்.

பின்பு ஒட்டக்கூத்தப்புலவர் அரசனை நீங்கித் தம் வீட்டிற்குச் சென்று வெட்கி மனவருத்தத்துடன் உண்ணாது படுத்துக்கொண்டிருந்தனர். அவர் மனைவி அவரை உணவுகொள்ள வரும்படி அழைக்க, புலவர் 'வேண்டுவதில்லை' யென்று மறுத்தனர். அது கேட்ட அம் மாது பாலைக் கொண்டுவந்து கொடுக்க அதையும் மறுத்தனர் புலவர். அதன்மேல் அவர் மனைவி, "உடம்புக்கு என்ன? வாய் அரோசிகமாயிருக்கிறதா! பாலில் இன்னும் கொஞ்சம் சருக்கரை கலந்து தரட்டுமா?'' என்று பரிவுடன் கேட்டாள். அதற்கு ஒட்டக்கூத்தப்புலவர் "சருக்கரை கலந்து தரினும் வேண்டாம்: புகழேந்தி வெண்பாவை அதில் பிழிந்துதரினும் வேண்டாம்'' என்று சொல்லினர். இது புகழேந்திப்புலவர் செவிக்கெட்ட, அவர் "நாம் இதுவரை ஒட்டக்கூத்தப் புலவரைப் பகைவரென நினைத்தது பெரும் பிழை; நமது செய்யுட் சுவையை உணர்ந்தவர் இவரே. நமது பெருமையை விளங்கச் செய்பவரும் இவரே'' என்று வியந்து உள்ளம் மகிழ்ந்து, ஒட்டக்கூத்தப்புலவரோடு பகைமை நீங்கி மிக்க நட்பினராய்க் கலந்து பல நாள் வாழ்ந்திருந்து, இவ்வுலக வாழ்வை நீத்துத் திருமாலின் பதத்தை யடைந்தனர்.

புகழேந்திப் புலவர் வரலாற்றைப் பற்றி வேறு சில கர்ணபரம்பரைச் செய்திகள் வருமாறு:

ஒட்டக் கூத்தப்புலவர் பாண்டியன் மகளைச் சோழனுக்கு மணம்பேசச் சென்றபோது பாண்டியன் அவரை நோக்கி, "புலவீர், உமது மன்னன் எமது மகளை மணக்கத் தக்கவனுதல் எங்ஙனம்? எம்மினும் அவற்குள்ள ஏற்றம் என்னை ?" என்று பரிகாசமாய்க் கேட்டனன். அக்கேள்விக்குத் தக்க உத்தரமாக ஒட்டக்கூத்தர் "சோழராஜர்கள் ஏறும் கோரம் என்று பெயர்பெற்ற பஞ்சகல்யாணிக் குதிரைகளுக்கு, பாண்டியர் ஏறும் கனவட்டக்குதிரைகள் சமானமாகுமா ? அகண்ட காவிரியாற்றுக்கு வைகையாறு ஒப்பாகுமா ? (சிவனைப் போலவே) சோழர்கள் அணியும் ஆத்திமாலைக்குப் பாண்டியர் அணியும் வேப்பமாலை சரியாகுமா ? (சோழர் குலமுதலாய் உலக இருளை ஒழிப்பதாயுள்ள) சூரியனுக்கு, தேய்ந்து வளர்ந்து தனக்கென்று ஒளியில்லாத) சந்திரன் சமமாகுமா ? வீரர்க்கெல்லாம் முதன்மையான வீரன் (எனப் பெயர்போனவன்) சோழனு, பாண்டியனு ? வெற்றியைக்காட்டும் சோழனுடைய புலிக்கொடிக்கு, பாண்டியனுடைய சிறு மீன்கொடி நிகராகுமா ? 'ஊரெனப் படுவது உறையூர்' எனச் சிறப்பிக்கப்பட்ட சோழன் நகராகிய உறையூருக்கு, பாண்டியர் பதியாகிய கொற்கையோ சமமாவது? (பலவளமலிந்த) சோழநாட்டுக்கு, (வானம் பார்த்து நிற்கும்) பாண்டிநாடு எவ்வகையிலும் ஒப்பாமோ?" என்னும் கருத்தமைய,

"கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே!
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானே !
ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ அம்மானே !
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே !
வீரர்க்குள் வீரனெரு மீனவனே அம்மானே !
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே !

ஊருக்கு நந்தைநிகர் கொற்கையோ அம்மானே !
ஒக்குமோசோ ணாட்டுக்குப் பாண்டிநா டம்மானே !''

என்ற பாடலைக் கூறி, இதனாற் சோழன் பெருமையை வெளியிட்டார்.

அப்போது புகழேந்திப் புலவர் ஒட்டக்கூத்தரை நோக்கி, "முனிபுங்கவராகிய அகஸ்தியர் செந்தமிழை நிலவ வைத்தது, பாண்டி நாட்டுப் பொதிய மலையிலிருந்தோ, சோணாட்டு நேரி மலையிலிருந்தோ? அரியவும் ஒப்பற்றவு மான அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் சோமசுந்த ரக் கடவுள் செய்தருளியது மதுரையிலோ, உறையூரிலோ? ஸ்ரீ வாசுதேவனாகிய விஷ்ணு மூர்த்தியின் அவதாரம் (பாண்டியன் கொடிக்குறியாகிய) மீனோ, (சோழன் கொடிக் குறியாகிய) புலியோ? சிவன் முடியில் ஏறுவது (பாண்டி யர் குல முதலாகிய) சந்திரனோ, (சோழர் குலமுதலாகிய) சூரியனோ? (திருஞானசம்பந்தரிட்ட) ஏடு எதிரேறிச் சென் றது சோழநாட்டுக் காவிரியாற்றிலா, பாண்டி நாட்டு வையையாற்றிலா? பேய்க்குப் பகையாய்த் தோற்றி அதனை விலக்குவது சோழனது ஆத்திமாலையா, பாண்டியன் அணி யும் வேப்பமாலையா? மதுரையை அழிக்கப் பொங்கி எழுந்த சமுத்திரம் அஞ்சிவந்து வணங்கியது சோழன் காலையா, பாண்டியன் காலையா?'' என்னும் கருத்தமைய,

"ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்த தம்மானே!
ஒப்பரிய திருவிளையாட் டுறைந்தையிலோ அம்மானே!
திருநெடுமா லவதாரம் சிறுபுலியோ அம்மானே!
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ அம்மானே!
கரையெதிரல் காவிரியோ வையையோ அம்மானே!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே!

பரவைபணிந் ததும்சோழன் பதந்தனிலோ அம்மானே!
பாண்டியனுர் பராக்கிரமம் பகர்வரிதே அம்மானே!"

என்ற பாடலைப் பாடி, இதனுற் பாண்டியன் பெருமையை வெளியிட்டார்.

ஒட்டக் கூத்தர் சோழ சமஸ்தானத்தில் பரிசு பெற வரும் வித்துவான்களைச் சிறையில் வைப்பதும் நவராத்திரி உற்சவத்தில் அவர்களை அழைப்பித்துத் தாம் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் உத்தரம் சொல்லக் கூடாமல் மயங்க வைத்துத் துன்பப்படுத்துவதும் வழக்கம். அவ் வழக்கப்படியே கூத்தரால் சிறையிலிடப்பட்ட சில புலவர்கள் புகழேந்தியாருடன் வசித்திருந்தார்கள். அவர்களில், சிறிதே புலமையுடையவராயிருந்த குயவன், கம்மாளன், வண்ணுன், அம்பட்டன், வேளாளன் ஆகிய ஐவருக்குப் புகழேந்திப் புலவர் விசேஷமாய்க் கல்வி போதித்துச் சிறந்த புலவர்களாக்கினுர். நவராத்திரியும் நெருங்கியது. அப்போது வழக்கம் போல ஒட்டக்கூத்தப் புலவர், சிறைச்சாலையில் அடைபட்டிருந்த வித்துவான்களை வரவழைத்தார். அவர்களில் அனேகர், கல்வியில் அற்பமானவர்களாய் இருந்தமையால், புகழேந்தியார் தம்மிடத்திற் கல்வி பயின்று தேர்ந்த குயவன் முதலிய ஐவரையும் மற்றவர்களுக்கு முன்னே அனுப்பினர். அவர்கள் ஐவரும் ஒருவர்பின் ஒருவராய், ஒட்டக்கூத்தர் முன் சென்று நின்றனர். முதலில் மிடுக்காய் நின்ற குயவனை ஒட்டக்கூத்தர் இறுமாந்து நோக்கி,

"மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
ஆனை முன்வந் ததிர்த்தவ னுரடா?

என்று கேட்டனர். அதற்குக் குயவன்,

கூனை யுங்குட மும்குண்டு சட்டியும்
பானை யும்பண்ணு மங்குசப் பையல்யான்''

என்றான்.

ஒட்டக்கூத்தப் புலவர் தம்மை யானை யென்று சொன்னதற்கு அதனை அடக்குவது அங்குசம் ஆகையால், 'அங்குசப் பையல்' எனவும், தான் குசவன் ஆகையால், 'அம்+குசப்பையல்' எனவும் குயவன் சிலேடையாகச் சொன்னான்.

பிறகு அம்பட்டன் வந்து நின்றான். அவனுக்குக் கண் பொட்டை. அவனைக் கண்டு,

"விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலவிலக்க
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின்றாய் பொட்டையாய்புகல்வாய்

என்றனர் கூத்தர். அதற்கு அம்பட்டன்,

" கண்பொட்டை ஆயினும் அம்பட்டன்நான்கவிவாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயும் திடுக்கிடப் பாடுவனே''

என்றான்.

பிறகு வந்த கருமானை, ஒட்டக்கூத்தர், "நீ யார்?" என்று வினவ, அதற்கவன்,

"செல்வன் பதல்வன் திருவேங்கடவன் ஜெகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொன்ன பேரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே''

என்று சொன்னான்.

அதன் பின்பு வந்த வேளாளனைக் கூத்தர் நோக்கி, "பிரபல கவிஞராகிய எமக்கு முன்னே புன்கவிஞனாகிய நீ வந்து நிற்கத் தகுமா?" என்றார். அதற்கு வேளாளன்,

"கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூதலமேழ்
காக்கின்ற மன்னன் கவியொட்டக் கூத்தனின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிய பாவலரே."

என்றான்.

இவர்கள் புலமைத் திறத்தைக் கண்ட கூத்தர், புகழேந்தியால் நேர்ந்தது இதுவென உணர்ந்து, தம் கர்வம் அடங்கினர்.

புகழேந்தியார் சிறையிலிருந்தபோது சோழன் அவரைச் சுட்டி, "இவர் செந்தமிழ்க் கவிவாணர் அல்லரோ?" எனத் தன் அருகில் இருந்த ஒட்டக் கூத்தரைக் கேட்டனன். அதற்குக் கூத்தர் புகழேந்தியார் தம்மினும் தாழ்ந்தவரே என்பது தோன்ற அவரை இகழ்ந்தும், தம்மைத் தாமே புகழ்ந்தும்,

"மானிற்கு மோஅந்த வாளரி வேங்கைமுன் வற்றிச் செத்த
கானிற்கு மோவவ் வெரியும் தழன்முன் கனைகடலின்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தானிற்கு மோவக் கதிரோ னுதயத்திற் றார்மன்னனே."

என்றொரு பாடலைப் பாடினர். அது கேட்ட புகழேந்தியார் 'இவன் இவ்வளவு வல்லவனா?' என்று எண்ணிச் சிரித்து, அரசனைப் பார்த்து, "இந்தப் பாடலை வெட்டிப் பாடவோ? அல்லது ஒட்டிப் பாடவோ?" என்று கேட்க, அவன் "வெட்டிப் பாடவேண்டாம்; ஒட்டியே பாடும்" என்றனன். அதன்மேல் புகழேந்தியார், 'அந்த மான் முதலியவைகள் அவனே, புலி முதலியவைகள் நானே' என்ற பொருள் தோன்றும்படி,

"மானவ னனந்த வாளரி வேங்கையும் வற்றிச்செத்த
கானவ னனவ் வெரியுந் தழலுங் கனைகடலின்

மீனவ ஞனந்த வெங்கட் சுறவமும் வீசுபனி
தானவ ஞனக் கதிரோ னுதயமுந் தார்மன்னனே''

என்று அப்பாடலையே ஒட்டிப் பாடினர்.

இந்தக் கர்ண பரம்பரைக் கதைகளில் மெய் பொய் பிரித்தறிவது அறிவாளர் கடன்.

இவ்வரலாறுகளுக்குக் கர்ணபரம்பரையைத் தவிர வேறு ஆதாரம் கிடைப்பதுதானும் அரிதாயிருக்க, இந்தக் கர்ண பரம்பரை வரலாறுகளே ஒரு விதமாயில்லை; பல வாறு மாறியும் முன்னொடு பின் முரணியும் வழங்கப்படு கின்றன. இவற்றில் வரும் பல தனிப்பாடல்களில், பாட பேதங்கள் மிகுந்திருக்கின்றன. எல்லாவற்றையும் திரட் டிப் புடைத்துப் பதர்நீக்கி மணிகொள்வது எளிதல்ல. ஆனதுபற்றியேபோலும், இதுகாறும் எவரும் முழுமன துடன் இம் முயற்சியிற் புகுந்திலர்.

கர்ண பரம்பரை வரலாற்று மாறுபாடுகளுக்கு ஓர் உதாரணம் வருமாறு: 'இழையொன்றிரண்டு' என்ற செய் யுள் ஒட்டக்கூத்தர் பாடியதாகவும், 'நானேயினியுன்னை' என்ற செய்யுள் புகழேந்திப் புலவர் பாடியதாகவும் மேலே காட்டப்பட்டன. சிலர் பின்னது ஒட்டக்கூத்தர் பாடிய தெனவும், முன்னது புகழேந்திப் புலவர் பாடியதெனவும் மாற்றிக் கூறுவர். வேறு சிலர், தமிழ் நாவலர் சரிதையை ஆதாரமாகக் கொண்டு, மேற்கூறிய இரண்டு பாடல்க ளோடு,

"தாபங் கமழும்பைங் கோதையன் விக்ரம சோழன் மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின் முனின் திருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலை சாய்த்துநின்ற
கோபந் தணியன்ன மேயெளி தோநம் குடிப்பிறப்பே.''

என்ற பாடல் ஒன்றைக் கூட்டி, மூன்றையும் புகழேந்திப் புலவர்க்கே உரிமைப்படுத்தி விட்டு,

"கரத்தும் சிரத்தும் களிக்கும் களிறுடைக் கண்டன் வந்தான்
இரத்தும் கபாடம் இனித்திறப் பாய்பண் டிவனணங்கே
உரத்தும் சிரத்தும் கபாடம் திறந்திட்ட துண்டிலங்கா
புரத்தும் கபாட புரத்தும்கல் யாண புரத்தினுமே."

என்ற ஒரு பாடலை ஒட்டக்கூத்தரதாக்குவர்.

பாடபேதங்களுக்கு உதாரணம் வேண்டினும் இச் செய்யுள்களிலேயே கிடைக்கும். 'இழையொன்று' என்ற பாடலில், முன்னம் காட்டிய பாடத்துக்கு வேறாக 'வகிர் செய்த வற்றேன்றனையும் இடை' எனவும்; 'இரண்டு கட் கோம்பனையாய்' எனவும்; 'கோபந்தவிர்' எனவும், 'கோப மென்னே' எனவும்; 'மான பரன்கண்டன் வாயில் வந்தால்' எனவும்; 'தம் வாயில் வந்தால் எனவும்; 'பொருரோ குடி யிற் பிறந்தவரே' எனவும் இத்துணைப் பாடபேதங்கள் உள.

கர்ணபரம்பரை வழக்குகளும், தனிப்பாடற் பாட பேதங்களும் பலவாகப் பல்கியவாறே, புகழேந்தியாற் பா டப்பெற்ற சோழன் பெயரும் பலவாய்ப் பல்கியுள்ளது. குலோத்துங்கன் என்பதே அச்சோழனுக்குச் சாதாரணப் பெயராய் வழங்கியிருக்கிறது. ஆனல் இப்பெயரே கொ ண்ட சோழர் வேறு பலரும் உளர். அவருள், புகழேந்திப் புலவர் காலத்திருந்த குலோத்துங்கனுக்கு, விக்கிரம சோழன், உத்துங்கன், சயதுங்கன், கண்டன், மானுபர ணன், அகளங்கன் என்னும் இத்துணைப் பெயரும் உண்டு; இன்னும் சிலவும் உண்டு என்பர்.

எது எவ்வாருயினும், புகழேந்திப் புலவர் புகழை என்

றும் கீழ் விடாமல் ஏந்தி நிற்பது அவர் இயற்றிய நள வெண்பாவே. அவர் இயற்றியவாகக் கதை பொருத்திக் கூறப்படும் அல்லியரசாணி மாலை முதலிய நூல்கள் மிகப் பிரபலமாகப் பரவி,அவர் பெயரைப் பெண்டிர்க்கும் இனிப் பாக்கிவிட்டன. பெரும்பாலும் புலவர்களுக்கே பயன்பட்டு, அவர்களிடையே உலவி வரும் 'இரத்தினச் சுருக்கம்' என்ற ஒரு சிறு நூலும் இவர் இயற்றியதே என்பர்.

இரத்தினச் சுருக்கம் என்னும் நூல் ஸ்திரீகள் கூந் தல், முகம், கண் முதலியவற்றின் தன்மைகள் இவை என வும், அவற்றிற்கு உவமானமாகக் கூடியன இவை எனவும் கூறுகிறது. இதில் 28 செய்யுட்கள் உள. இவற்றுள் முதல் மூன்றும் கட்டளைக்கலித்துறைகளாகவும், மற்றவை வெண் பாக்களாகவும் இருக்கின்றன. புகழேந்திப்புலவர் வெண் பாப்புலி என்பெயர் பெற்றவர். அதற்கேற்ப, அவர் இயற்றிய நளவெண்பா ஒப்புயர்வற்ற இனிய நடை பெற் றுத் திகழ்கிறது. ஆனால், இவ்விரத்தினச் சுருக்கத்தில் வந் துள்ள வெண்பாக்களில் நளவெண்பாவின் சாயை தானும் காணப்படவில்லை. ஆனதுபற்றி, இதனை இயற்றியவர் புக ழேந்திப் புலவர் தான் என்று ஐயமறத் துணியக்கூட வில்லை. இந்நூலிலிருந்து உதாரணமாக ஒரு செய்யுள் காட் டுவோம்:

(கண்ணிற் கிணை)

வேல்வாள் கணைவண்டு வேலை விடமமுதம்
சேல்பங் கயங்குடங்கை செங்காவி-காலன்
வடுமான் கருவிளையை வண்சகோ ரத்தை
அடுமாம் குழையை அடர்த்து.

வெண்பாவில் புகழேந்தியும் விருத்தப்பாவில் கம்ப ரும் இணையற்றவர்கள் என்பது பிரசித்தமான விஷயம். நள

வெண்பாவிலிருந்து எடுத்து இதனடியில் காட்டப்பட்டுள்ள செய்யுட்களால் புகழேந்தி வெண்பாப் பாடுவதில் புலி என்று விசேஷப் பெயர் பெற்றதற்கு நியாயம் விளங்கும்.

(நளவெண்பா)

"காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு."

"வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன-கஞ்சம்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு."

"தெரிவனநூ லென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே-ஒருபொழுதும்
இல்லா தனவு மிரவே யிகழ்ந்தெவரும்
கல்லா தனவுங் கரவு."

"நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா-வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு."

"காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்,—போதில்
சினையாமை வைகும் திருநாடா! செம்மை
வினையாமை பூண்டார் நெறி."

"அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ என்றார் தெரிந்து."

"உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானம் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து."

"வேலை கரையிழந்தால் வேதம் நெறிபிறழ்ந்தால்
ஞால முழுதும் நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை உரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்.

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்."

"சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம், இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி."

"சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னும் இம்மாற்றம் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்.

"வில்லி கணையிழப்ப வெண்மதியஞ் சீரிழப்பத்
தொல்லை யிருள்கழியத் தோன்றினான்-வல்லி
மணமாலை வேட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயிற் செங்கதிரோன் குன்று."

"வண்டார் வளவயல்சூழ் மன்னுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி-கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி."

"மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே-அக்காலங்

கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு."

"கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ-பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர்!"

புகழேந்திப்புலவர் வெண்பாப் புலியென்பதற் கேற்ப,

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
சயங்கொண்டான் விருத்த மென்னும்
ஒண்பாவி லுயர்கம்பன் கோவையுலா
வந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்கா
சலாதொருவர் பகரொ ணாதே.

என வழங்கும் செய்யுளைக் காண்க.

இவர் பெயரால் வழங்கும் நங்கைப்பாட்டுகளில், அல்லியரசாணிமாலை என்னும் ஒரு நூலிலிருந்து சில வரிகள் உதாரணமாகக் காட்டுவோம்:

(அல்லியரசியின் நாட்டுவளம்)

வாழை வடக்கீனும்; வான்கமுகு தெற்கீனும்;
கரும்பும் இளநீரும் கண்திறந்து மடைபாயும்;
கட்டுச் சலங்காணும்; கதிருழக்கு நெற்காணும்;
அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராகும்;
அரிதாளின் கீழாக ஐங்கலந்தேன் கூடுகட்டும்;
ஆனைகட்டும் தாளும் வானமட்டும் போராகும்."

# ஒட்டக்கூத்தர்

இப் பரதகண்டத்தின் தென்பாகத்திலுள்ள தமிழ்நாடானது முன் காலத்தில் சேரதேசமென்றும், சோழதேசமென்றும், பாண்டிய தேசமென்றும் மூன்று சிற்றரசு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த தென்று கேள்வியுற்றிருக்கிறோமல்லவா? இந்த மூன்றுநாட் டரசாட்சிகள் செழித்தோங்கியிருந்த காலத்தில் சமஸ்தான வித்துவான்களென்று சிறந்த புலவர்கள் அங்கங்கே இருந்தனர் என்றும் சரித்திரங்களால் அறிகிறோமல்லவா? அவர்களுள் ஒட்டக்கூத்தர் என்பவர் உறையூரிலிருந்து அரசு செலுத்திய இராஜேந்திர சோழன் காலத்திலும் அவன் குமாரன் குலோத்துங்கச் சோழன் காலத்திலும் அரண்மனை வித்துவானாயிருந்தார். அதே காலத்தில் பாண்டிய நாட்டின் இராஜ தானியாகிய மதுரையில் செங்கோல் செலுத்திய வரகுண பாண்டியன் சமஸ்தானத்தில் புகழேந்திப்புலவர் வித்துவானாயிருந்தார். இவ்விருவருடைய வரலாறுகள் ஐரோப்பிய பண்டிதர்களுடைய சரித்திரத்தைப்போல் பூரணமாய் இப்பொழுது கிடைப்பது அரிது. ஆயினும், கர்ணபரம்பரையாய்க் கேட்டவற்றை இங்கே தொகுத்துரைப்போம்:

"வானத்தின் கீழே பூரணமானது ஒன்றுமில்லை" என்னும் ஆன்றோர்வாக்கு நல்லோர் வல்லோர் விஷயத்தில் விளக்கமாவதென்றால் அதைக் கேட்போர் அனைவரும் கிலேசப்படத் தக்கதாயிருக்கிறது. ஆயினும் நாம் நவமாக ஒன்றைத் துணிந்து கற்பித்துக் கூறுவது உசிதமானதன்று. எது எப்படியிருந்தாலும் பூர்வகால வித்துவான்கள் சிலர் தங்களுக்கு அந்தந்த அரசர்கள் கொடுத்த சன்

மானங்களும் காணியாட்சிகளும் பெற்றிருந்த செருக்கினல் ஒருவரையொருவர் மதியாமல் பரஸ்பரம் பொருமை பாராட்டி வாதிட்டுவந்தார்கள் என்பது மாத்திரம் அவரவர்களின் பாக்களால் தெரிய வருகின்றது.

ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் கம்பர் என்னும் கவிச்சக்கரவர்த்திக்கு எதிரியாய் இருந்தவ ரென்பதற்குக் கம்பர் இறந்தபோது,

> " இன்றைக்கோ கம்பன் இறந்தநாள்! என்கவிக
> ளின்றைக்கோ ராசசபைக் கேற்குநாள்!—இன்றைக்கோ
> பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருக்க
> நாமடந்தை நூல்வாங்கு நாள்!''

என்று ஒட்டக்கூத்தர் தமக்குள் நெடுநாளாயிருந்த குரோதத்தை வெளியிட்ட பாட்டும் ஒன்றுண்டு. இதிற் பாடபேதங்கள் பல.

இந்த ஒட்டக்கூத்தர் செங்குந்த ரென்னும் கைக்கோளர் ஜாதியில் பிறந்தவர். அந்த ஜாதியார்க்குத் தந்துவாயர் என்று ஒரு பெயருண்டு. தந்து என்னும் வடமொழிக்குப் பஞ்சுநூலென்று பொருள். அந்தத் தந்துவை, அறுந்து போகும் வேளைகளில், வாயின் எச்சிலால் பிணைத்து நெய்கிறது கைக்கோளர் வழக்கமாதலால் அவர்களுக்கு தந்து வாயர் என்னும் பேருண்டாயிற்று. அந்த ஜாதியார் தமக்கு, சிவபெருமான் அமிசமாகிய வீரபத்திரர்தாம் மூலபுருஷர் என்பர். இந்தக் கைக்கோளர் துணி நெய்யும்பொழுது கால்மாறிக் கால்மாறி மிதித்து நெய்யும் தொழிலைச் செய்வதால் இச்சாதியாருக்குக் கூத்தர் என்றும் ஒரு காரணப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

ஒரு காலத்தில் தம் வமிசத்தில் பிறந்தவரான ஒட்

டக்கூத்தரிடத்தில் கைக்கோளர் ஒருங்கே சேர்ந்து வந்து "ஐயா புலவரே! நீர் எங்குலத்தில் பிறந்த புலவராயிருந்தும் நமது குலம் விளங்கும்படியான நூல் ஒன்றும் செய்யவில்லையே. வேளாளர், வணிகர், வன்னியர் ஆகிய சாதியாருக்கு நூல்களிருப்பதுபோல நமது குலத்தாருக்கும் ஒரு நூல் இருக்கவேண்டாமா?" என்று முறையிட்டுக்கொண்டார்கள். அதற்கு அவர் "நீங்கள் கேட்க வேண்டியது தான்; நானும் பாடித் தரவேண்டியதுதான். ஆயினும் நமது பாடலுக்கு யாது பரிசு அளிப்பீர்கள்?" என, அவர்கள் "அளவற்ற திரவியந் தருவோம்" என்றார்கள். அப்போது ஒட்டக்கூத்தர் "எனக்குச் சோழராஜன் கொடுத்த திரவியங்கள் வேண்டுமளவுண்டு; உங்கள் திரவியம் எனக்கு வேண்டுவதில்லை: உமது குலத்துத் தலைப் பிள்ளைகளின் தலைகள் எழுபது தருவீர்களாயின் நமது ஆயுதமான ஈட்டியைச் சுட்டி ஈட்டி யெழுபது என்றொரு கிரந்தம் பாடுவேன்" என்றார். செங்குந்தர்கள் இதைக் கேட்டவுடன் காதுக்குள் நாராசங்காய்ச்சி விட்டதுபோல ஏங்கிப் பின்னிட்டார்கள். அப்போது ஒட்டக்கூத்தர் செங்குந்தர்கள் வமிச பரம்பரையினது பிரபாவங்களை யெடுத்து ஓதினார். அதைக் கேட்ட மாத்திரத்தில் செங்குந்தர்களுக்குச் சூரத்துவமும் ரோஷமும் உண்டாகித் தங்கள் கையாலேயே தத்தம் தலைப்பிள்ளைகளின் சிரங்களைக் கத்திகளால் அறுத்துக் கூடைகளில் சுமந்துகொண்டு ஒட்டக்கூத்தரிடம் வந்தார்கள். அப்போது அவற்றைப் பார்த்த புலவர் அவர்களை நோக்கி, "நீங்கள் வெட்டிவந்த தலைகளைச் சோழமகாராஜன் திருவாசலின் முன்பு வையுங்கள்" என்றனர். அப்படியே அவர்கள் அவற்றைக் கொண்டு போய்ச் சோழன் சபையில் ஒரு குவியலாய்க் குவிக்கச்

சோழராஜன் அதைக்கண்டு, கூத்தரைக் கூவி, "ஓய் கூத்த ரே இது என்ன கூத்து!" என்றான். "அது இன்னும் சிறிது பொழுதில் விளங்கும்" என்று சொல்லி, அப்புலவர் அந்தத் தலைகளைச் சிங்காசனமாகக்கொண்டு, அதன்மேலிருந்து ஈட்டி யெழுபது பாடி முடித்தார். அதன் கடைசியில் அந் தத் தலைகளும் ஒன்றுகூடி உயிர்த்தெழும்படி சரஸ்வதியை நோக்கி அவர் ஒரு பாட்டுப் பாடினார். அதாவது,

"கலைவாணி நீயுலகி லிருப்பதுவுங்
 கல்வியுணர் கவிவல் லோரை
நிலையாகப் புரப்பதவு மவர்நாவில்
 வாழ்வதுவும் நிசமே யன்றோ?
சிலைவாண னுவிருந்தா யிரம்புயங்க
 ளணிந்துமுயர் சீவ னுற்றான்;
தலையாவி கொடுத்திடுஞ்செங் குந்தருயிர்
 பெற்றிடநீ தயைசெய் வாயே."

என்பதாம். சரஸ்வதியை நோக்கி இப்பாடலைச் சொன்ன வுடனே அங்கிருந்த தலைகள் தத்தம் முண்டங்களிடம் சென்று ஒட்டிக்கொண்டு உயிர் பெற்றன. அப்பொழுது இப்புலவருக்கு முன்னிருந்த கூத்தரென்னும் பெயரோடு தலைகளும் முண்டங்களும் ஒட்டப்பண்ணின காரணத்தால் ஒட்டக்கூத்தரென்னும் பெயரும் சிரச்சிங்காசனாதிபதியென் னும் பெயரும் அரசனால் அளிக்கப்பட்டன. அச் சமயம் ஒட்டக்கூத்தர் செங்குந்தரைப் புகழ்ந்து ஒரு செய்யுள் சொல்லினர். அதாவது,

"நிலைதந்தா ருலகினுக்கு மியாவருக்கு
 மானமதை நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய்
 திடவென்றே கையிற் றந்தார்

விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த
ரென்கவிக்கோர் விலையா கத்தான்
தலைதந்தா ரெனக்குமொட்டக் கூத்தனெனப்
பெயரினையுந் தாந்தந் தாரே.''

என்பதாம். இது கர்ணபரம்பரையாய் வந்த கதை. இது முற்றும் உண்மை என்று கொள்வதற்கு இடமில்லை. செங் குந்தர் வேண்டுகோளின்மேல் கூத்தர் 'ஈட்டி எழுபது' என்று ஒரு சிறுநூல் செய்தனர் என்பது மட்டும் ஐயமின்றி ஒப்புக்கொள்ளக் கூடியது. இது நிற்க.

வரகுணபாண்டியன் மகள் குலோத்துங்கச்சோழனுக்கு விவாகஞ் செய்விக்கப்பட்டாள். அப்போது பாண்டியன் தன் பெண்ணுக்குச் சீதனமாகத் தன் சமஸ்தான வித்துவா னாகிய புகழேந்திப் புலவரையுங் கொடுத்தான்.

புகழேந்திப்புலவர் சோழராஜனிடத்திலிருக்கும் பொ ழுது ஒட்டக்கூத்தர் தமது அரசனாகிய சோழமகாராஜனைப் புகழ்ந்து,

"இன்னங் கலிங்கத் திகல்வேந்த ருண்டென்றோ
தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா உன்றன் அயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட வினைவு.''

என்ற செய்யுளைச் சொல்ல, அதைக்கேட்ட பாண்டியனது சமஸ்தான வித்துவானாகிய அப் புகழேந்திப் புலவர்,

"தென்னவன் தென்னர் பெருமான் திருமதுரை
மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னிநா
டாலிக்கும் வேந்தாம் அபய குலன்மகளிர்
தாலிக்கும் ஒன்றே தளை.''

என்ற செய்யுளைச் சொல்லி ஒட்டக்கூத்தர் பாடலைக் கண்

டித்தனர். அதுமுதல் ஒட்டக்கூத்தருக்குப் புகழேந்திப் புலவரிடத்தில் பகை உண்டாயிற்று.

பின்பு ஒருநாள் சோழராஜன் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு தெருவில் உலாவப்போனான். அத்தருணத்தில், ஔவையார் இரண்டு காலையும் நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். சோழனைக் கண்டவுடன் அவர் ஒருகாலை முடக்கினார். பிறகு புகழேந்திப் புலவரைக்கண்டு மற்றொருகாலையும் முடக்கினார். ஒட்டக்கூத்தரைக் கண்டு இரண்டு காலையும் நன்றாய் நீட்டிக்கொண்டார். அதைக் கண்ணுற்ற ஒட்டக்கூத்தர் மனம் திடுக்கிட்டு, "ஓ அம்மையே! நீ இவ்வாறு செய்த காரணம் யாது?" என அதற்கு அந்த அம்மையார், "அடா கூத்தா! சோழமகாராஜன் கிரீடாதிபதி யாதலால் ஒரு காலையும், புகழேந்திப்புலவர் பெருங் கல்விமானாதலால் மற்றொரு காலையும் முடக்கிக்கொண்டேன். நீயோ முழுமூடனானபடியால் மறுபடியும் இரண்டுகாலையும் நீட்டினேன். நீயும் இந்தப் புகழேந்தியைப்போல வல்லமையுள்ளவனானால் சோழனையும் சோழநாட்டையும் சந்திரன் மும்முறை வர ஒருபாடல் சொல்லுவாய்" என ஒட்டக்கூத்தர் அதற்குச் சம்மதித்து,

"வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மிடறொடித்துத்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோடிறங்குஞ் சோணாடா!
கள்ளர் மறவர் குறும்பகற்றுங் கண்டா கண்டர் பெருமானே!
பிள்ளைமதியா லென்மாது பேதை மதியு மிழந்தனளே."

என்று பாடினார். அதுகேட்டு ஔவையார் கைகொட்டிச் சிரித்து, " அடா ஒட்டா, ஒரு மதிகெட்டாய்! உன் திறமை இதுதானோ! நன்று நன்று!" என்று இழிவாய்ப் பேசி அங்கிருந்த புகழேந்திப் புலவரைப் பார்த்து, "ஐயா! நான்

சொல்லியபடி நீர் பாடும், பார்ப்போம்" என்றனர். அதற்கு அவர் இதோ பாடுகிறேனென்று பாடத்தொடங்கி,

"பங்கப் பழனத் துழுமுழவர் பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைவிட் டெறியுந் தமிழ்நாடா!
கொங்கற் சமரா பதியளித்த கோவே! அமரர் குலதீபா! [வே."
வெங்கட் பிறைக்குங்கரும் பிறைக்குமெலிந்தப் பிறைக்கும் விழிவே

என்று பாடினார். அதைக் கேட்டு ஔவையார் வியந்தனர். ஒட்டக்கூத்தர் முன்னிலும் அதிகமாகப் புகழேந்திப் புலவரிடத்துப் பகைமைகொண்டு அவரைத் தண்டிக்கக் கருதி அதற்குத்தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார். அவர் கருத்தின்படியே தக்க தருணம் ஒன்று வாய்த்தது. அப்போது ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவரைப் பிடித்துச் சிறையில் வைத்துவிட்டார்.*

பின்பு ஒட்டக்கூத்தர் கம்பரால் பாடப்பட்ட இராமாயணத்தின் ஆறுகாண்டங்களுக்குமேல் உள்ள உத்தரகாண்டத்தை விருத்தச் செய்யுட்களால் பாடி முடித்தனர். இதுவு மன்றிப் பற்பல கோவை உலா அந்தாதி முதலிய பிரபந்தங்களையும் இயற்றினார். ஒருநாள் அவர் நோயினால் வருந்தித் தம் வீட்டில் ஆகாரமின்றிப் படுத்திருக்கையில் சிறையினின்று மீண்டு வந்த புகழேந்திப் புலவர் ஓடிவந்து ஒட்டக்கூத்தரைக் கொல்ல நினைத்து அவர் வீட்டின் புறத்தில் ஒளித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒட்டக்கூத்தர் மனைவி, பால் கொண்டுவந்து குடிக்கும்படி வேண்ட, ஒட்டக்கூத்தர் மனைவியை வெறுத்து நோக்கி அப் பாலுடன் புகழேந்தி வெண்பாவைப் பிழிந்து கொடுத்தாலும்

* இவ்வரலாறு வேறு விதமாகவும் வழங்குகிற தென்பதைப் புகழேந்திப் புலவர் சரித்திரத்தில் காண்க.

வேண்டுவதில்லை என மறுக்க, அதுகேட்ட புகழேந்திப் புலவர் ஓடிவந்து ஒட்டக்கூத்தரைத் தழுவிக்கொள்ள, இருவரும் கலந்து மகிழ்ந்து அளவளாவி இருந்தனர். சில நாட் சென்றபின் ஒட்டக்கூத்தர் முருகக்கடவுள் திருவடிகளை அடைந்தனர்.

கம்பராமாயணக் கருப்பொருள் என இப்பொழுது வழங்குவது இவர்பாடிய உத்தரகாண்டத்துள் ஒரு பகுதியே. இவர் வேறு பல உலா, பரணி முதலிய சிறு நூல்களும் பாடியுள்ளார். அவற்றுள், தக்கயாகப்பரணி என்பதொன்று. அதைப்பற்றி ஒரு கதை கூறுவர். அது வருமாறு:

குடந்தை வீரசிங்காதனமட வாசியாகிய சங்கமர் ஒருவர், திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரப் பதிகங்களைப் பாடிப் பிச்சை யேற்பது வழக்கம். அவர் ஒரு நாள் ஒட்டக்கூத்தர் மனைவாயிலில் நின்று 'கல்லாலினிழற்கீழ்' என்னும் தேவாரத்தைப் பாடிப் பிச்சை யேற்றனர். அவர் பாடிய பாசுரத்தைக் கவனமாய்க் கேட்டிருந்த ஒட்டக்கூத்தர், அதன் பொருள் தமக்குத் தெளிவாய் விளங்காமையால், அச்சங்கமரை நோக்கி, "சுவாமி, நீர் பாடிய தேவாரத்தின் பொருள் என்ன?" என்று வினவினர். அதற்கு விடையாக அச்சங்கமர் "யான் அதன் பொருள் அறியேன். நீர் அறிந்து சொன்னாலும், உம் பொருளெல்லாம் சுவாமிகள் பாசுரத்தின் ஒரு மொழிக்குக்கூட ஈடாகாது" என்றனர். 'நாம் பொருள் கேட்டால் அதைக் கூறாது, இவ்வாண்டி ஏதோ உதாசினமாய்ப் பேசுகிறான்' என்று கூத்தர் கோபங்கொண்டு, தம் கோபந்தீரச் சங்கமரைக் கசையால் அடித்தார். அவ்வடி பொறுக்கமாட்டாமல் சங்கமர் உயிர் விட்

டார். அது கண்ட கூத்தர் திடுக்கிட்டு, "ஐயோ, பெரிய தவறு செய்துவிட்டோமே. கோபம் பாபமாய் முடிந்ததே!" என்று வருந்தி நடுங்கித் தம் மனையுட் சென்று கதவடைத்துக் கொண்டார். சங்கமர் இறந்த செய்தி சிறிது சிறிதாய்ப் பரவி அவரோடு மடத்திலிருந்த மற்றச் சங்கமர்களுக்கெட்டியது. உடனே அச்சங்கமர்கள் எல்லோரும் திரண்டு எழுந்து இறந்த சங்கமரைக் கண்டு அவரைக் கொன்றவரைத் தண்டிக்கப் பெருமுழக்கமிட்டு வந்தார்கள்.

அவர்கள் வருவதறிந்த வுடனே ஒட்டக்கூத்தர் தாம் மனையிலிருப்பது ஆபத்துக்கிடமென் றுணர்ந்து, சோழன் அரண்மனைக்கோடி, அரசனிடத்தில் நடந்த காரியத்தைச் சொல்லிக்கொண்டிருந்தனர்.

சங்கமர்கள், தம்மவரைக் கொன்றது ஒட்டக்கூத்தரே என்பதையும், அவர் தம் மனையை விட்டோடி அரண்மனையிலிருப்பதையும் அறிந்துகொண்டு அங்கே சென்று தம் வரவை அறிவித்தார்கள். அரசன் ஒட்டக்கூத்தரை ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டுத் தானே சங்கமர்களிடம் சென்று அவர்களை வணங்கி, "அடிகளே! உங்களில் ஒருவர் இறந்துபட்டதை யான் அறிவேன். எதிர்பாராது நேர்ந்த இக்கொடிய குற்றத்தைத் தாங்கள் மன்னித்தருள வேண்டும். சங்கமக் கொலைக்குச் சிவாகமங்களில் விதித்த பிராயச்சித்தத்தை யானே புரிகின்றேன். கருணைசெய்யுங்கள்" என்று வேண்டினன்.

அரசன் வேண்டுகோளுக்கு அவர்கள் ஒரு சிறிதும் இசைந்திலர். "சங்கமரைக் கொன்ற சண்டாளனை நாங்களே தண்டித்தற்குரியோம். எங்கே அக்கூத்தன்? அவனைக் கொண்டன்றி நாங்கள் செல்லோம்" என்று பிடிவாதமாய்க் கூறி நின்றார்கள்.

வேறு வகையின்றி அரசன் அவர்களைச் சற்றிருக்கச் சொல்லி உட்சென்று, தன் மைந்தனை வருவித்துத் தன் வருத்தத்தைக் கூறி "நம் மூதாதையான மனுச் சோழற்கு நேர்ந்த தர்ம சங்கடம்போல் எனக்கும் இத் தருமசங்கடம் நேர்ந்திருக்கிறது. அச் சோழற்கு வீதிவிடங்கன் என்னும் சற்புத்திரன் வாய்த்தது போல நீயும் எனக்கு வாய்த்திருக்கிறாய். இச்சங்கடம் உன்னால்தான் தீரவேண்டும்" என்றனன்.

மைந்தன் தந்தை கருத்துணர்ந்து "ஐய, சூரியகுலத்தவர், தந்தை ஆசான் இவர்கள் கட்டளையை மறுத்தறியார். நானும் அக்குலவொழுக்கத்தில் ஒரு சிறிதும் தவறேன். தங்கள் கட்டளை எதுவாயினும் அதன்படி நடந்து கொள்வேன். என் உடலும் உயிரும் தங்கள் உடைமை. அவற்றைத் தங்கள் விருப்பம்போல், எது வேண்டுமானாலும் செய்யலாம்" என்றனன்.

உடனே மன்னன் மனமகிழ்ந்து தன் அருமைப் புதல்வனை ஒரு மூடுபல்லக்கில் ஏற்றி அதனைத் திரையால் மறைத்துச் சபைக்கெடுத்து வரும்படி ஏவலாளருக்கு உத்தரவு செய்து தான் முன்னதாகச் சென்றான். ஏவலாளர் அரசன் பின்னேயே அப்பல்லக்கைக் கொண்டுவந்து நிற்க, அரசன், அங்கே கூடியிருந்த சங்கமர்களை நோக்கி, "ஐயன்மீர்! நீங்கள் நாடிவந்த கூத்தர் இதனுள் இருக்கிறார். சங்கமக்கொலை புரிந்த இவரை நீர் நோக்குவதும் தகுதியன்று. ஆதலால் ஒரு மறைவிடத்துக் கொண்டுபோய் வைத்துக் கொல்லுங்கள்" என்றனர். இச் செய்தி,

"அன்னாளிற் குழுணன்தன் சிரசை ஈந்தான்
அதளங்கச் சோழனொரு பிள்ளை ஈந்தான்

ஒன்றும் தமிழ்க்கூத்தன் கவிதைக் காக
ஓராயிரம்செங் குந்தர்முதற் றலையை ஈந்தார்
பைந்நாக மணிகொடுத்தான் ஒருவே ளாளன்
பறையனோ டொக்கவுண்டான் அன்னை சோமன்
இந்நாளில் அடிபொறுத்தான் பிரம ராயன்
ஈன்றகலி யுகராயன் இனிய மாலே.''

என்ற தனிப்பாடலில் குறிக்கப்பட்டிருப்பது காண்க.

அரசன் சொல்லை மெய்யென்று நம்பி, சங்கமர்கள் அச்சிவிகையுடன் சென்றனர். ஆனால், சிறிது தூரம் போன பிறகு அச்சங்கமருட் சிலர், "நாம் இவனைக் கொல்வதன் முன் இவன் ஒட்டக்கூத்தன்தானா என்று முகத்தைப்பார்த்துத் தெரிந்துகொண்டு பிறகுதான் கொல்லவேண்டும். ஆய்ந்தோய்ந்து தேர்ந்துதெளிந்து செய்யாத காரியம் விபரீதமாய் முடியக்கூடும்'' என்றனர்.

அவர்கள் கூறியது நியாயமே என்று அனைவரும் ஒப்புக் கொண்டு பல்லக்கை நிறுத்தித் திரையை நீக்கிப் பார்த்தார்கள். உண்மை விளங்கிவிட்டது. பல்லக்கினுள் ஒட்டக்கூத்தருக்குப் பதிலாக அரசகுமாரன் இருப்பதை அவர்கள் கண்டார்கள்! உடனே அவர்கள் பிரமையும் கவலையும் கொண்டு, "அந்தோ, இஃதென்ன அநியாயம்! கொலைகாரன் ஒருவனாயிருக்க, அரசகுமாரனையன்றோ நாம் கொல்லவிருந்தோம்!'' என்றார்கள்.

அப்போது, அரசகுமாரன் அவர்களை நோக்கி, "பெரியீர்! நீங்கள் எண்ணிய செயலை என்பாற் செய்க. ஏன் கவல்கின்றீர்கள்?'' என்றனன்.

அதற்கு அவர்கள் "இளவரசே! எம்மவரைக் கொன்றவன் ஒட்டக்கூத்தன். அவனை விடுத்து இளவரசுப் பட்

டத்திற்குரிய நின்னைக் கொல்லும்படி அரசன் எம்மை ஏமாற்றி விட்டான். இது நியாயமோ?" என்றனர்.

"அதுபற்றி என்ன? கொலையுண்போன் யான். என்னை உரிமையாகப் பெற்றவர் என் தந்தை. யானும் அவரும் இதற்கு எம் முழுமனத்துடன் உடன்பட்டிருக்கும்போது, நீங்கள் என்னைக் கொன்று உங்கள் பழியைத் தீர்த்துக் கொள்ளப் பின்வாங்குவானேன்?" என்றனன் அரசகுமாரன்.

அவன் என்ன சொல்லியும் அவனைக் கொல்ல உடன்படாதவர்களாய் அச்சங்கமர்கள் அரசன்பாற் சென்று, "அரசே! உமது அருமைப் புதல்வனைக் கொன்று கொடியனாகிய கூத்தனைப் பாதுகாக்கக் கருதியது நீதியோ? உமக்கு இது நீதியாகத் தோற்றினும் எமக்கு இது செய்வது நீதியாகாது. தண்டனைக் குரியானை எம்மிடம் தாரும். அவனைப் பெற்றன்றி யாம் போகோம்" என்றனர்.

வேந்தன், செய்வதிது என்று தேராதவனாகிச் சிந்தை கலங்கினான். மறைவிடத்திலிருந்து நடந்தவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஒட்டக்கூத்தப் புலவர் ஏதோ ஒரு சூழ்ச்சியை மனத்தில் எண்ணி மறைவிடம் விட்டு வெளிப்பட்டுச் சபைக்கு வந்து அரசனை நோக்கி, "அரசே, நீர் மனங்கலங்க வேண்டா. இச்சங்கமர் என்னைக் கொண்டுபோய்த் தம் விருப்பம்போல் செய்யட்டும். அடைக்கலம் புகுந்த யானே இதற்கு மனம் ஒருப்பட்டு வந்து விட்டேனாதலால், உமக்கு யாதொரு தோஷமும் நேர இடமில்லை" என்றனர்.

அரசன் இன்னது சொல்வதென்று தோற்றாமல் மௌனமாயிருந்தான். ஒட்டக்கூத்தர் அரசன் மௌன

த்தையே சம்மதமாகக் கொண்டு சங்கமர்களை நோக்கி, "இதோ, நான் உங்கள் விருப்பத்துக் கிணங்கிச் சித்தமாக இருக்கிறேன். செய்வது செய்யுங்கள்" என்றார்.

"நல்லது, நீ எம்முடன் வருக" என்று அச் சங்கமர் ஒட்டக்கூத்தப் புலவரைக் கைக்கொண்டு, அரசனிடம் விடைபெற்றுச் சென்றனர்.

செல்லும் இடைவழியிற்றானே, பொழுது சாய்ந்து விட்டது. அப்போது புலவர் தம்மைக் கொண்டு செல்லும் சங்கமர்களை நோக்கி, "ஐயன்மீர்! யான் முக்காலமும் தவறாது சிவபூசைசெய்யும் நியமமுடையேன். இன்று அந் நியமந் தவறாமல் சிவபூசை செய்துவர எனக்கு விடையளியுங்கள்" என்றனர்.

யாவரேயாயினும் அவர் செய்யும் சிவபூசைக்கு இடையூறு இயற்ற ஒருகாலும் ஒருப்படாக் கொள்கையுடையோராதலால், சங்கமர்கள் புலவர் விருப்பப்படி அவரைச் சிவபூசை புரிய அனுப்பித் தாங்கள் அவர் வருகையை எதிர் பார்த்துக் காத்திருந்தார்கள்.

அவர்கள் அனுமதி பெற்றுச் சென்ற புலவர், சிறிது தூரத்தே ஓடிய அரிசோலார் நதியில் நீராடி, வெண்ணீறணிந்து, சிவபெருமானைச் சிந்தித்துத் தம் தீவினை தீர்த்தருளுமாறு பிரார்த்தித்துப் பின்பு அருகே யிருந்த மூளைச் சாளம்மை என்னும் காளி கோயிலை அடைந்து கதவைச் சார்த்தித் தாளிட்டுக்கொண்டனர்.

இதனை அறிந்த சங்கமர்கள், பெருங் கோபங்கொண்டு, 'புலவர் ஆலயத்துள் இருப்பதால் விடிந்த பிறகு அவரைப் பற்றி ஈர்த்துக் கொலைபுரிவதே தருமம். அதுகாறும் நாம்

இவ்விடத்தை விட்டு அகலக்கூடாது' என்று கருதிக் கோவிலைச் சூழ்ந்து காவலிருந்தனர்.

புலவர், சங்கமர்கள் கோவிலைச் சூழ்ந்து காத்திருப்பதுணர்ந்து, "இவ்வாபத்தினின்று என்னைக் காப்பாற்றியருள்" என்று காளி தேவியைப் பிரார்த்தித்தனர். தேவி அவருக்குப் பிரசன்னமாகி, "நீ நின் குலதெய்வமாகிய வீரபத்திரக் கடவுள்மீது ஒரு பிரபந்தம் பாடுக" என்றனள்.

"அங்ஙனமே பாடுவேன். ஆனால், அதை நீதான் எழுதவேண்டும்" என்றனர் புலவர்.

தேவி அதற்குச் சம்மதித்தனள். உடனே புல்வர், வீரபத்திரக் கடவுளின்மீது தக்கயாகப்பரணி என்ற பிரபந்தத்தைப் பாடினர். காளிதேவி அதைத் தன் கைப்பட எழுதினாள்.

அப்போது, வீரரசம் பாடுகிற தருணத்தில் தேவி தன் சதுர்க்கரங்களுள் ஒன்றில் ஏந்தியிருந்த தீபம் அசைவது கண்டு புலவர், 'கைத்தீபம் அசைவதென்?' என்று கூறித் தேவியின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தனர். அப்பால், வீரரசம் முடிந்ததும், ஆவேசமடங்கி, தாம் செய்த தவற்றை உணர்ந்து அதைப் பொறுக்கும்படி தேவியை வேண்டினர். தேவியும் 'நீ உன் உணர்வின்றிச் செய்த செய்கை அது. அதைப்பற்றிக் கவலாதே' என்று அருளினள்.

மறுநாள் பொழுது விடிந்தது. சங்கமர் கோயில் வாயிற் கதவைத் தட்ட, அப்போது புலவர் தாம் பாடிய தக்கயாகப் பரணிச் சுவடியை, கதவிடைத் துவாரமொன்றால் நீட்டினர். அதை அவர்கள் வாங்கி, அது வீரபத்திரக்

கடவுளைப் பற்றியதா யிருப்பது கண்டு, 'நம் கடவுளைப் பாடிய இவனை, இனி நாம் ஒன்றும் செய்யக் கூடாது' என்று தீர்மானித்து, அவர் குற்றத்தை மன்னித்து விட்ட தாகக் கூறிச் சென்றனர்.

அப்பால் கூத்தர் வெளிவந்து, தாம் பாடிய இப் பரணியை, கங்கை வீரேசர் சந்நிதியில் அரங்கேற்றித் தம்மைக் கொல்ல விருந்த சங்கமர்களாலேயே பல வரிசைகள் பெற்றார் என்பர். இத் தக்கயாகப்பரணி இன்னும் அச்சிடப் பெறவில்லை.

இவர் பாடிய இராமாயணத்தில் உத்தரகாண்டத்தில் சில செய்யுட்களை இங்கே எடுத்துக் காட்டுகிறோம்.

(பெண் பெற்றார் துயரம்)

"குலம்வேண்டு மென்றிருப்பார் குலத்துள்ளார்;
கல்வியினாற் குறையா ஞான
பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்;
பரந்தபெருஞ் செல்வ முள்ள
தலம்வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள்;
யௌவனமும் அழகுஞ் சார்ந்த
நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழல்
நங்கைமார் நலத்தின் மிக்கார்."

"பண்புடைய குடிப்பிறப்பும் பழிப்பில்லாப்
பேரழகும் பரந்த கேள்வி
நுண்பொருளை நீரொழியப் பாலுசரும்
அன்னம்போல் *நோக்கித் தேர்வும்
ஒண்பொருளும் இந்நான்கும் உடையாரைக்
கிடையாதிவ் வுலகந் தன்னில்

* 'நோக்கித் திரும்' என்றும் பாடமுண்டு.

பெண்பெறுகை போலிந்தப் பெரிய துயர்
தானுண்டோ பேசுங் காலே.''

(இராவணன் எமலோகவாசிகளைக் காணுதல்)

"உடுப்பதுவும் உண்பதுவும் இல்லாதோர்க்(கு)
உடைகூறை உதவி உண்ணக்
கொடுத்தவர்நோய் தீர்த்தோரும் கொடியோராய்க்
குணங்கள்பல செய்து தம்மை
அடுத்தடுத்து வைதாலும் பொறுப்போரும்
அந்தணரோ டாவுக் குற்ற
நடுக்கமது தீர்த்தோரும் நல்லுலகில்
நாயகராய் இருப்பக் கண்டான்.''

"மன்றுபறித் துண்டோரும் வழக்கல்லா
துரைத்தோரும் மனையாள் தன்னோ(டு)
ஒன்றியுடன் வாழாதே ஒராதே
பரதாரம் உவந்து ளோரும்
கொன்றுடலந் தின்றோரும் கோட்சொலித்
திரிவோரும் கோலிச் செய்த
நன்றிதனை மறந்தோரும் நரகத்தின்
இடைக்கிடந்து நடுங்கக் கண்டான்.''

(விதவையர் துன்பம்)

*"மக்க ளிழந்த இடும்பையினும் மனையா ளிழந்த இடும்பையினும்
மிக்க இடும்பை ஓவாத விதவை யிடும்பை எனவிளம்பத்
தக்க ததனல் என்கழுத்தில் தாலி நீதந் தருளென்று
தொக்க மணிப்பூண் மார்பனைத் தொழுதுபின்னும் இவைசொல்லும்''

(சீதை புலம்பல்)

"பையராவெம் பணத்துலகில் பழியாலே பழிமறைத்து
நெய்யாலே நெருப்பவிக்க நீணிலத்திற் கண்டறியேன்

---

* இச்செய்யுள் சிலப்பதிகாரத்துக்கு அடிபார்க்கு நல்லார் எழுதிய உரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

கையார்வெஞ் சிலைதரித்த காகுத்த னிடைக்கண்டேன்
உய்யாரென் மாமிமார் இவ்வுரை தம் செவியுறவே.''

"கன்னெஞ்ச ராயென்னைக் காட்டில்விடச் சொன்னவரோ
வன்னெஞ்ச ராயதனுக் கிசைந்துவிட வந்தவரோ
நன்னெஞ்சம் விழிக்கணிந்த நங்கைமார் நகைசெய்ய
இன்னஞ்சா காதிருந்த யானோநெஞ் சார்வலியார்?''

"பண்பிறந்த மொழிமடவார் பழித்தென்னை நகைப்பர்களோ
எண்பிறந்த வன்னெஞ்சன் இராகவனென் றியம்புவரோ
மண்பிறந்த பின்பிறந்த மறிகடல்சூழ் வையகத்துப்
பெண்பிறந்தார் யான்பட்ட பெருந்துயரம் ஆர்பட்டார்.''

(இராமர் வருகை)

"மனுகுலம் விளங்கத் தோன்றி வரிசிலை யிளையா னோடும்
முனியொடு போனான் வந்தான் முப்புர மெரித்த வில்லி
தனுவினை யிறுத்துச் சீதை தனைக்கரம் பிடித்தான் வந்தான்
அனையவ ளுடனே மீண்டும் அயோத்தியில் அடைந்தான் வந்தான்.''

"தாயுரை தலைமேற் கொண்டு தையலை யுடனே கொண்டு
தீயவெங் கானஞ் சேர்ந்த செருவலி வில்லி வந்தான்
தூயமா முனிவன் முன்பு தோன்றிய தூயோன் வந்தான்
மாயமா ரீசன் மாள வரிசிலை வளைத்தோன் வந்தான்.''

"அனுமனை அடிமை கொண்டாங் காயிரங் கதிரோன்மைந்தற்
கினியனாய் வாலி மாள எரிசரம் துரந்தான் வந்தான்
வினைவதன் முன்னம் ஆழி நீரெலாம் நெருப்பதாகக்
குனிசிலை வளைத்தான் வந்தான் கோசல நாடன் வந்தான்.''

"குன்றினா லாழி காட்டிக் கொடுந்திறற் சேனை யோடு
சென்றிராக் கதரை யெல்லாம் செருக்களத் தவிய நூறித்
தன்றிற லழிந்து நின்ற தசமுகன் வலிமை கண்டங்
கின்றுபோய் நாளை வாஎன் றியம்பிய இறைவன் வந்தான்.''

"முன்னநாம் சொன்ன நாளின் முடுகிநாம் செல்லோ மாயின்
வன்னியிற் பரதன் வீழும் என்றுதன் மனத்தில் எண்ணி
அன்னவன் எரிவி ழாமல் அனுமனை முன்னே ஏவிப்
பொன்னகர் அடைந்தான்வந்தான் புவனமூன்றுடையான் ..தான்."

(மாதர் இராமர் வருகை கண்டு கூறல்)

"வண்ணமா முகிலோ மையோ மரகத வடிவோ வள்ளல்
ஒண்ணிற மிவையொன் றாக உருக்கிய உருவோ என்பார்;
கண்ணிணை செவ்வாய் பாதம் கைத்தலம் கமலம் என்பார்;
புண்ணியம் செய்தா ரிந்தப் புறக்கொடை தொழுவார் என்பார்."

"கள்ள மாமனக் கைகேசி கண்களால் இவனைக் கண்டும்
முள்ளழற் கானத் தேவ முயன்றனள் என்னோ என்பார்;
ஒள்ளழற் றாய கற்பால் உயர்ந்தகோ சலையென் பாளிப்
பிள்ளையைப் பெறுதற் கென்ன பெருந்தவம் செய்தா ளென்பார்."

"சிறந்தவர் முகமும் கண்ணும் புருவமும் செய்ய வாயும்
நிறைந்தபூண் மார்பும் எங்கள் நெஞ்சுவிட் டகலா தென்பார்;
அறம்புரி மனத்த ளாகி அருந்தவம் செய்து பெண்ணாய்ப்
பிறந்திலள் இவனைப் பெற்றும் பெற்றிலள் சீதை யென்பார்."

"பங்கயக் கண்ணாற் பற்றிப் பார்த்தனன் நம்மை யென்பார்;
அங்கவை பொதுநோக் ..கும் அவனியில் வந்து தோன்றும்
செங்கயற் கருங்கட் செவ்வாய்ச் சீதையைப் பார்த்த கண்ணால்
நங்களைப் பார்க்கு மோதான் ஞாலநா யகனின் றென்பார்."

(சில மெய்யுரைகள்)

"தந்தை தாயரைத் தம்முனைச் சார்நெறி
அந்த ணாளரைச் சீறு மறிவிலார்
இந்த லோகத் திரும்பழி யெய்திமேல்
அந்த லோகத் தருநர கெய்துவார்."

"மாசி லாத குடிப்பிறப்பு மானங் கீர்த்தி யிவைமாய
ஆசை நோயா னதுபெருக வனங்க சரத்தா லேவுண்டு

கூச வின்றிக் குலத்தவரைக் குலையச் செய்தார் குலத்தோடு
நாச மெய்திப் பழியோடு நரக முறுவ ரெனவுரைத்தான்."

"மெய்க்கொண்ட உள்ளத்து மேலோரே யாயிடினும்
பொய்க்கொண்ட சிந்தையா ரேனும் பொதுவாய
மைக்கொண்ட கண்ணார் மனைவிய ராகித்தம்மைக்
கைக்கொண் டிருந்தார்க்குத் தப்பக் கடனன்றால்."

"உலகத்தா ருள்ள தென்ற துள்ளதா மொலிநீர் வேலை
உலகத்தா ரில்லை யென்ற தில்லையா முணருங் காலை
உலகத்தா ருள்ள தென்ற தில்லையென் றுரைக்கு மாகில்
உலகத்துக் கவன்பே யாகு முண்மையாற் பயனொன் றில்லை."

"இன்பத்தி லிறுமாந்து தோணோக்கி யின்றமத
துன்பத்தி லழுந்துவார் தொல்லுலகி லறியாதார்
இன்பத்துன் பங்களே யெய்தியபோ திவையெல்லா
முன்பற்று விடாதவினைப் பயனென்பார் முழுதுணர்ந்தோர்"

"சிறிய மனத்த னாகிச் சிறந்தசெங் கோலை விட்டுக்
கூறுவெம் பழியை நாடிக் குலைந்திடக் கொடுங்கோ லோச்சி
ஆறிலொன் றிறைகொள் கின்ற தல்லவை யாற்றிடாதே
ஏறிறை கொள்வோ னட்டி லிருப்பவர் மூட ரென்றான்."

"தண்டிக்கப் படுவோர் தம்மைத் தண்டியா தொழித்து விட்டுத்
தண்டிக்கப் படாதோர் தம்மைத் தண்டிக்குந் தரணி மன்னன்
எண்டிக்கும் பரந்து மூடு மிரும்பழி யெய்தித் தீயோர்த்
தண்டிக்குந் தரும னாலே தண்டிக்கப் படும்பி னென்றான்."

ஒருநாள் குலோத்துங்கச் சோழன் புதிய கிரீடந் தரித்தபோது ஒட்டக்கூத்தர் அவன் செங்கோலின் திறத்தைப் பின்வருங் கவியின் முதலிரண்டடியாற் சிறப்பித்தார். உடனே அரசன் போதுமென்று நிறுத்திவிட்டு அப்பாட்டின் பிந்திய இரண்டடிகளையும் பாடி ஒட்டக்கூத்தரைச் சிறப்பித்தான். அப்பாடல் வருமாறு:

"ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெங்கு
நீடுங் குடையைத் தரித்த பிரானிந்த நீணிலத்திற்—
பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென் றேயெனைச் சொல்லுவரே"

இதில் வாயிலிற் கட்டிய மணியின் நாக்கு அசைய இடங் கொடாமல் செங்கோல் செலுத்தியதும் அப்படிச் செலுத் தியவன் ஒட்டக்கூத்தன் பாதத்தைச் சிரசின்மேல் தாங்க லும் காட்டப்பட்டன. முன்னாளில் நாட்டில் அதிகாரிகள் அக்கிரமம் செய்தால், அது அரசன்காதிற் படாதபடி அவ் வதிகாரிகள் முறையிட்டுக்கொள்ள அரசனிடம் வருவோ ரைத் தடுப்பதுண்டாகையால், அதற்கு வழியின்றிக் கோட் டைவாசலில் ஒரு பெரியமணி கட்டிவைப்பதுண்டு. நியா யம்பெறுதவன் அம்மணியின் நாவை அசைத்துச் சத்த மிட்டால் அரசன் அவனை வருவித்து நியாயமளிப்பான். இதுதான் வழக்கம்.